விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்

உலகளாவிய Parcel.lk பொதிகள் சேவை
(5481)
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.2100/=
ஜெர்மனி - Rs.2000/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2150/= இத்தாலி - Rs.2250/=
Parcel Lanka (Pvt) Ltd - 011 4 321 000
இல. 81A, பருத்தித்துறை வீதி, நல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சங்கு 26
ஒலி 311 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை (26.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழர்களுக்கு தீர்வு வழங்க காலம் இழுத்தடிக்கப்படுகிறது



### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்க காலம் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் 23ஆம் பக்கம் பார்க்க

## கொலைக் கலாசாரத்துக்கு இடமளிக்க முடியாது - சஜித்

(கொழும்பு)

நாட்டில் கொலைக் கலாசாரத்துக்கு இடமளிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் 23ஆம் பக்கம் பார்க்க



### பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய
# அரசியல்வாதிகள் விபரம் விரைவில் அம்பலமாகும்



### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் விபரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் பாராளுமன்றத்தில் விரைவில் வெளிப்படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

### மதுபோதையில்
## 'யாழ்தேவி' ரயிலின் கட்டுப்பாட்டாளர் கைது

(யாழ்ப்பாணம்)

கடமை நேரத்தில் மது அருந்திய குற்றச்சாட்டின் பேரில், 'யாழ்தேவி' ரயிலின் தலைமை ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவர் ரயில் பாதுகாப்பு அதிகாரிகளால் 23ஆம் பக்கம் பார்க்க

### தம்புள்ளையிலிருந்து
## வடக்கு மாகாணத்துக்கு போதை கடத்தல்

### மாத்தளை பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(மாத்தளை)

வடக்கு மாகாணத்துக்கு போதைப்பொருள் தம்புள்ளையில் இருந்தே கைமாற்றப்படுவதாக மாத்தளை பிரதிப் 24ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.கந்தரோடையில்
## இனந்தெரியாத கும்பலால் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கந்தரோடைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின்மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துமீறி உள்நுழைந்த 23ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் விசாரிக்கப்படும்

### பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)

மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் விசாரிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். 23ஆம் பக்கம் பார்க்க



## அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லை

### நாமல் எம்.பி விமர்சனம்

(கொழும்பு)

இலங்கையின் சட்ட, ஒழுங்குகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், சில தேசிய மக்கள் சக்தி அமைச்சர்கள் தினசரி 23ஆம் பக்கம் பார்க்க

## சுமத்ரா தீவுகளில் நிலநடுக்கம்

(கொழும்பு)

இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா தீவுகளில் நேற்று நண்பகல் சுமார் 5.2 ரிக்டர் அளவுகோலில் மிதமான நிலநடுக்கம் 23ஆம் பக்கம் பார்க்க

### கோப்பாய்ச் சந்தியில்
## ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### 6 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் நேற்று சனிக்கிழமை ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

கோப்பாய்ச் சந்தியில் அமைந்துள்ள சமிக்ஞை 23ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ
திருச்சிற்றம்பலம்

**கொக்குவில் அருள்மிகு தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில்**
**பெரியபுராண முற்றோதலும் திருமூலர் குருபூசையும்**

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஐப்பசித் திங்கள் 10 ஆம் நாள் தொடக்கம் 18 ஆம் நாள் வரை
(27.10.2025 தொடக்கம் 04.11.2025 வரை)

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப் பொழில் தில்லையுள்
மா நடஞ்செய் வரதர் பொற்றாள் தொழ - 12.001.02

**தகைசால் தவப்பெரியோர்களே,**

எல்லாம்வல்ல தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானின் பெருங்கருணையினால், எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், வருகின்ற ஐப்பசித் திங்கள் 10 ஆம் நாள் தொடக்கம் 18 ஆம் நாள் வரையான காலத்தில் (27-10-2025 தொடக்கம் 04-11-2025 வரை), உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனாகிய இறைவனின் மலர் சிலம்படி நிழலெய்திய திருத்தொண்டர்கள் அறுபத்து மூவரின் வரலாற்றை எடுத்துரைத்து தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரியபுராணத்தை முற்றோதல் செய்து வழிபட திருவருள் கூடியுள்ளது.

ஐப்பசி 10 ஆம் நாள் தொடங்குகின்ற இவ் முற்றோதல் வழிபாடு, ஐப்பசி அச்சுவினி நாண்மீன் கூடிய திருமூலர் பெருமானின் குருபூசை நன்னாளில் நிறைவு பெறும். அடியார் பெருமக்கள் அனைவரும் இவ் முற்றோதல் வழிபாட்டில் கலந்துகொண்டு, ஐம்பூதநாதரின் திருவருளையும் சைவ உலகம் போற்றும் எம் நாயன்மார்களின் குருவருளையும் பெற்று உய்யுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

**இடம்**
தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,
தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

**காலம்**
காலை 8.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| காலை 08.30 மணி | - | ஐம்பூதநாதர் சிறப்பு வழிபாடு |
| காலை 08.45 மணி | - | முற்றோதல் ஆரம்பம் |
| மதியம் 12.00 மணி | - | அமுது செய்வித்தல் |
| மதியம் 12.30 மணி | - | முற்றோதல் தொடர்தல் |
| மதியம் 02.30 மணி | - | முற்றோதல் நிறைவு |

தொடர்ந்து ஒன்பது நாட்கள் இந்த ஒழுங்கில் நிகழ்வு இடம்பெறும். நிறைவு நாளான 04.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று திருமூலர் குருபூசையுடன் முற்றோதல் நிறைவுபெறும். இந்நாளில் தமிழ்நாட்டிலிருந்து **பேராசிரியர் சித்தாந்த சைவ சுடர்மணி மீ. சிவசண்முகம் ஐயா** அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும், வருகின்ற மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஐப்பசித் திங்கள் 20 ஆம் நாள் (06.11.2025) அன்று, தென்னாட்டில் **அருட்குருநாதர் தவத்திரு. ந. ஒளியரசு ஐயா** அவர்களினால் தீக்கை வழங்கலும் இடம்பெற திருவருள் கூடியுள்ளது. தீக்கை பெறவிரும்பும் அடியார்கள் தென்னாட்டை தொடர்பு கொள்ளவும்.

தென்னாட்டிற்கான வழி

(C-4188)

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்**
**+94 21 222 9722 / +94 70 770 1111**


## சுங்கத்தின் வசமுள்ள
# வாகனங்களை விடுவித்தல் தொடர்பில் புதிய வர்த்தமானி

சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவிப்பது தொடர்பான புதிய நிபந்தனைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவிப்பை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

இந்தப் புதிய விதிமுறையின்படி, வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாடு அல்லாத வேறு ஒரு நாட்டில் சர்வதேச நாணய கடிதம் (cross-border Letter of Credit) திறக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்தால், அந்த வாகனங்களை விடுவிக்க அனுமதிக்கப்படுகிறது.


ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாகக் கூறி கடந்த மே மாதம் முதல் சுங்கத்தால் நூற்றுக்கணக்கான வாகனங்கள் துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில்ஆவணங்கள் மற்றும் பதிவு தொடர்பான குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அத்தகைய வாகனங்களை விடுவிக்க இறக்குமதியாளர்களுக்கு இப் புதிய வர்த்தமானி வாய்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பிறந்து 8 நாளான சிசு உயிரிழப்பு
## அல்லைப்பிட்டியில் சோகம்

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் பிறந்து எட்டு நாட்களேயான ஆண் சிசு ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சிசு சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளது.

கிருமித் தொற்றுக் காரணமாகவே குறித்த சிசு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)



சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள போக்குவரத்து நெடுஞ்சாலை மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் திணைக்களத்தின் தலைவர் லியு ஹைசிங்கை சந்தித்துக் கலந்துரையாடினார்.


**நாகபூஷணி திருமண சேவை**

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மனிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)
**077 138 7596, 071 9999 306**
(5745)



**கண்ணீர் அஞ்சலி**

எமது சக நண்பன் திரு. குமரன் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி **பானுமதி விவேகானந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1675)

பிறப்பு 10.04.1957 இறப்பு 24.10.2025

ஆழ்ந்த அனுதாபங்கள் யாழ்ப்பாண மருந்துவ பிரதிநிதிகள் சங்கம்



**வாகனங்கள் தேவை**

உங்களிடம் முச்சக்கர வண்டி, மோட்டார்சைக்கிள், CAR, VAN இருந்தால் நீங்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றலாம். பதிவு இலவசம்

Uber Jaffna இல.197B, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்
(C-325)
**070 755 5755**
**070 500 2052**



**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். நகரை அண்டிய பகுதியில் உத்தியோகம் பார்க்கும் மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. குறைந்த வாடகை விரும்பத்தக்கது.

(5705)
**077 008 3431**
**077 967 2613**



**16 ஆம் ஆண்டு நினைவலைகள்**

அமரர் **காசிப்பிள்ளை செல்லத்துரை**



தோற்றம் : 03.02.1939
மறைவு : 23.10.2009
திதி : 26.10.2025

உலகினில் எத்தனை சொந்தங்கள் இருப்பினும் எம் கண்கள் தேடுவது அப்பாவையே!
ஆண்டுகள் பல கோடி ஆனாலும், நீங்கள் காட்டிய நல்வழிகளில் நடந்திடுவோம் என்றும் உங்கள் நினைவுகளுடன்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் (5743)
டச்றோட், உடுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்திற்கு நம்பிக்கையான பலமான பங்குதாரர்

இலங்கையின் மென்மையான மோட்டார் சைக்கிள் சந்தை முதல்வனிடமிருந்து மீண்டும் சிறந்த நம்பிக்கை உங்களுக்கு

## SINGER® Safari 4S







- 72CC எரிபொருள் செயற்திறன் என்ஜின்
- உயர் வேகம் : 80 KMPH
- பாரிய பெற்றோல் தாங்கி : 5.8L
- ELECTRIC / KICK START
- ALLOY WHEELS
- LED லைட்

சிறப்பு அறிமுக விலை **375,000/-** மட்டுமே

(அனைத்து வரிகள் உள்ளடங்கலாக)

உங்கள் பதிவுகளை எந்தவொரு சிங்கர் கிளையில் அல்லது ☎ 0115 400 400 அழைத்து எமக்கு வழங்குங்கள்

(C-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரத்திற்கான பொதுத் தகவல் தொழில்நுட்ப தேர்வுக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து அதிபர்களும் தங்கள் பாடசாலைக்குரிய அனுமதி அட்டைகளை அந்தந்த வலயக் கல்வி உதவி கல்வி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம், அவர்களின் தனிப்பட்ட தபால் முகவரிகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளின் பெயர்கள், பாடங்கள் தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால், அத்தகைய மாற்றங்களை உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் செய்யலாம் என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அனைத்து திருத்தங்களும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செய்துகொள்ள வேண்டும் எனவும் பரீட்சாத்திகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை நவம்பர் 10 ஆம் திகதி முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை, நாடு முழுவதும் உள்ள இரண்டாயிரத்து 362 தேர்வு நிலையங்களில் நடைபெறும்.

பொதுத் தகவல் தொழில்நுட்ப தேர்வு டிசெம்பர் 6 ஆம் திகதி ஆயிரத்து 665 தேர்வு நிலையங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இலங்கையில் பிறப்பு விகிதத்தில் வீழ்ச்சி

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் இலங்கையில் திருமணங்கள் கணிசமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டில் மொத்தம் ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 290 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் குறைவாகும் என தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு, பொருளாதார நெருக்கடியின் காலத்தில், நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 140 திருமணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

முன்னதாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ புள்ளிவிபர தரவுகளின்படி பிறப்புகளிலும் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்து 761 பிறப்புகள் பதிவாகியுள்ளன.

இது 2020 ஆம் ஆண்டில் பதிவான மூன்று இலட்சத்து ஆயிரத்து 706 பிறப்புகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும். (8)

## புலிகள் கூட அலுவலகங்களுக்குள் புகுந்து எதிரிகளைக் கொலை செய்யவில்லை-சாகரகாரியவசம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளைக் கொலை செய்யவில்லை. போர்க் காலத்தை விடவும் தற்போது பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெலிகம துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமானது படு பயங்கரமாகும் எனவும் தமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அது வழங்கப்படாத சூழ்நிலையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 30 வருடகாலம் போர் நிலவியது. இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் கூட இவ்வாறு அச்சமின்றி அலுவலகங்களுக்குள் புகுந்து தமது எதிரிகளை கொல்லவில்லை. ஆனால், இந்த அரசாங்க ஆட்சியின் கீழ் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரி வித்துள்ளார்.

மேலும், அரசாங்கம் நாட்டை அராஜக நிலைக்குக் கொண்டு செல்வதற்காகப் பாதாளக் குழு என்ற போர்வையில் தமக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

மக்கள் நாய், பூனைகள் போல சுட்டுக்கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் பாதாளக் குழுக்களை ஒடுக்குகின்றோம் என்ற போர்வையில் அக்குழுக்கள் பலப்படுத்தப்படுகின்றனவா என்ற சந்தேகமும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8)

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சேவையில் இருந்து விலகும் அபாயம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் திட்டமற்ற வாகன இறக்குமதியால் அடுத்த ஆண்டுக்குள் சுமார் மூவாயிரம் குறுகிய தூரப் பேருந்துகள் சேவையில் இருந்து விலகும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


திட்டமிடப்படாத வாகன இறக்குமதியால் வீதிகளில் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நெரிசல் காரணமாக பேருந்துகளின் எரிபொருள் செலவு உயருவதுடன், ஒரு நாளைக்கு இயக்கப்படும் பயணங்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளது.

இதன் விளைவாக, பேருந்து உரிமையாளர்கள் தொழிலில் இருந்து வெளியேறி வருவதாக தெரிவித்துள்ளார். (8)

# மரண அறிவித்தல்

## பேரம்பலம் கந்தசாமி (புத்தா)



சாவகச்சேரி, சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி அவர்கள் 23.10.2025 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, சிவசுப்பிரமணிம் (SPS மணியம்) ஆகியோரின் அன்பு சகோதரரும், சுதர்சன், சுசித்திரா காலஞ்சென்றவர்களான பிரபாகர், சகிதா ஆகியோரின் அன்புத்தந்தையும், நவிலகுமாரன், றஜிதா, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருபன், லக்ஷா, றிவிசா, ஜெனிஸ்கா, கரிகாலன், விதுஜன், சந்தோஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.
T.P: 076 874 9221

(1673)

தோற்றம்
17.12.1949

மறைவு
23.10.2025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்து - பாதாள உலகக்குழு வலையமைப்பில் சிக்குமா வடக்கு?



“இனியும் நாம் எச்சரிக்கையில்லாமல் இருப்போமாக இருந்தால் அது ஐந்து தசாப்த மண் மீட்புப் போரில் இறந்த எம் இனத்தின் இளைஞர்களின் முகத்தில் கரிபூசும் செயலே”

அபிமன்யு

இஷாரா செவ்வந்தியின் கைதின் பின் பாதாளக் குழுக்களும் அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸார் பெரும் கலக்கத்திலுள்ளனர் என்பது புலனாகிறது.

பாதாள உலகக் குழுக்களின் பிரதான தொழிலாக போதைவஸ்து வியாபாரம் காணப்படுவதுடன் பெரும் ஆயுதபலத்துடன் நிழல் அரசை நடத்தி வந்தனர் என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பாதாள உலகக் குழுக்களின் இவ்வாறான வளர்ச்சிக்கு அரசியல்வாதிகளின் பங்களிப்பு மிகப்பெரியது என்பதே உண்மை.

அந்தளவிற்கு அவர்களின் செல்லப்பிள்ளைகளாக இருந்து அவர்களுக்கு வேண்டியதை செய்து முடித்ததுடன் தமது பிரதான போதை வியாபாரத்தை இவர்களின் நிழலில் இருந்து மேற்கொண்டு வந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே தற்போது பாதாள உலகக் குழுக்களின் வலையமைப்பை உடைத்திருக்கிறது அநுர அரசாங்கம்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து பாதாள உலகக் குழுத்தலைவர் சஞ்சீவ கொல்லப்பட்டதன் பின்னணியிலேயே இவ் அதிரடிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சட்டத்தரணி வேடமணிந்து நீதிமன்றத்திற்குள் புகுந்து குற்றக் கூண்டில் வைத்து சஞ்சீவவைக் கொல்லும் திட்டத்தை வகுத்த கெஹெல்பத்தர பத்மே அண்மையில் இந்தோனேசியாவில் வைத்துக் கைதுசெய்யபட்டதைத் தொடர்ந்து இஷாரா செவ்வந்தி மற்றும் அவரது குழுவினர் நேபாளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்த இரு கைதுகளுமே பாதாள உலகக் குழுக்களின் முழு ஜாதகத்தையும் விபரிப்பதாய் அமைந்திருக்கின்றது.

இவர்கள் கடந்த கால அரசாங்கங்களுடனும் அரசியல்வாதிகள் பலருடனும் மிக நெருங்கிய தொடர்புகளை பேணிவந்தார்கள் என்றும் யார் யார் எந்தெந்த அரசியல்வாதிகளுடன், எவ்வாறான தொடர்புகளைப் பேணினர் என்பதையும் வெகுவிரைவில் அரசு வெளியிடும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால அண்மையில் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் பேச்சு நிச்சயம் அரசியல்வாதிகள் பலரின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

நாட்டில் என்றுமில்லாதவாறு இளைஞர்களிடத்தே போதைப் பழக்கம் தொற்றிக் கொண்டுள்ளமை நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

அதிலும் வடக்கில் இளைஞரிடத்தே போதைப் பாவனை அதிகரித்துள்ளதுடன் சாதாரண இளைஞர்களிடத்தே எவ்வாறு போதைவஸ்து மிகவும் இலகுவாகக் கிடைக்கிறது என்ற கேள்வியும் எழும்பியுள்ளது.

இங்குதான் நாம் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அதாவது, எமது பிள்ளைகள் யாருடன் தொடர்புகளைப் பேணுகின்றனர், அவர்களின் நடத்தை எவ்வாறு இருக்கிறது. அவர்களின் நட்பு வட்டத்தில் உள்ளவர்கள் யார் என்பவற்றை நுணுகி ஆராய வேண்டும்.

ஏனெனில் தெற்கின் மிகப் பிரபல்யமான பாதாள உலகக் குழுவினர் வடக்கை மையப்படுத்தியே பல குற்றச்செயல்களைச் செய்திருக்கிறார்கள். செய்து கொண்டிருக்கிறார்கள்.

இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவினர் வடக்கினூடாகவே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இன்னும் பல தேடப்படும் குற்றவாளிகளும் வடக்கினூடாகவே நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான பாதக செயற்பாட்டிற்கு வடக்கில் பலர் உதவியுள்ளனர். அவர்கள் கைதுசெய்யப்பட்டுக் கொண்டிருப்பதான செய்திகளை நாம் அன்றாடம் அறிந்துகொண்டிருக்கின்றோம்.

இந்நிலையில் போதை என்ற மாயையில் சிக்கும் எம் இளைஞர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணும் சந்தர்ப்பத்தை அது ஏற்படுத்தி விடும்.

அவ்வாறான நிலை ஏற்படுமாக இருந்தால், அது பயங்கரவாத செயற்பாடுகளுடனானதாகவே பார்க்கப்படும். அவ்வாறு நிகழ்ந்தால் எமது இளைஞர் சமுதாயத்தின் வாழ்க்கை இருள் நிறைந்ததாகிவிடும்.

நிலை இவ்வாறு இருக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊடகப் பிரதானிகளைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் பேச்சு பீதியை ஏற்படுத்துவதாய் இருந்தது.

அதாவது, நாட்டில் பாதாள உலகக் குழுவும், போதைவஸ்து வர்த்தகர்களும் பலம் பொருந்தியவர்களாக இருக்கின்றனர்.

அவர்களிடம் நிதிபலமும் ஆயுத பலமும் இருக்கிறது. இவர்களை ஒடுக்குவதில் அரசு வலுவாகச் செயற்பட வேண்டியுள்ளது.

போதைவஸ்து வியாபாரிகளுக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் அரசியல்வாதிகள் பலர் துணை நிற்கின்றனர்.

பொலிஸாரும் இவர்களுக்குத் துணை நிற்கின்றனர் அண்மையில் ரீ 56 ரகத் துப்பாக்கி ஒன்றை பாதாள உலகக் குழுவிற்கு விற்பனை செய்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கிறார்.

நாட்டில் போதைப் பாவனை மிகவும் அதிகரித்துள்ளது. அதிலும் பாடசாலை மாணவர்களிடத்தே போதைப் பாவனை அதிகரித்திருப்பதான தகவல்கள் கிடைத்துள்ளன.

குறித்த பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பயத்தின் நிமிர்த்தம் அவற்றை வெளியிடாமல் இருக்கின்றார்கள்.

ஆயினும் தற்போதைய அரசாங்கம் போதைவஸ்தை முழுமையாக இல்லாதொழிக்கும் செயற்திட்டத்தில் முழுமூச்சாய் ஈடுபட்டு வருகிறது எனத் தெரிவித்திருக்கின்றார்.

உயிர்கொல்லி போதைப் பாவனை இளைஞர்களிடத்தே அதிகரித்தால் அவர்களின் எதிர்காலம் சூனியமாகிவிடும்.

அதனூடே நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நேரம் இது. “எமக்கேன் வீண் வேலை" என நாம் எமது சமூகத்தைக் கவனிக்காமல் விட்டுவிடுவோமானால் எமது சமூகம் போதை வலையமைப்புக்குள் வீழ்ந்துவிடும் அதன்பின் அவர்களை மீட்பதென்பது இயலாத செயல்.


இங்கு இரு வேறு பிரச்சினைகள் எம்முன்னே பரந்து விரிந்து நிற்கிறது.

ஒன்று போதை மற்றது பாதாள உலகக் குழுத் தொடர்பு.

இவை தெற்கில் இருந்த வரை நாம் நிம்மதிப் பெருமூச்சுடன் இருந்தோம். இவை இரண்டும்.

இப்போது எம் சமூகத்துக்குள்ளும் புகுந்துவிட்டது.

இனியும் நாம் எச்சரிக்கையில்லாமல் இருப்போமாக இருந்தால் அது ஐந்து தசாப்த மண் மீட்புப் போரில் இறந்த எம் இனத்தின் இளைஞர்களின் முகத்தில் கரிபூசும் செயலே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு அண்மையாக பண்ணை வீதிக்குச் செல்லுகின்ற தொடக்க வீதியின் ஒரு பகுதி நீண்ட காலமாகச் சேதமுற்றிருந்தது.

இதுபற்றி இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தோம்.

தற்போது அந்த வீதி மிகச் சிறப்பான முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியைப் புனரமைப்பதில் பங்காற்றிய அனைவரையும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறித்த வீதி புனரமைக்கப்பட்டதால், மழை நீர் தேங்கி நிற்கின்ற பிரச்சினையும் தீர்ந்துள்ளது.

பிரச்சினைகளை மட்டும் நாங்கள் கதைப்பதாக இருக்கக் கூடாது.

மாறாக, பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதைப் பாராட்டவும் வேணும்.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூற, பாராட்டுத் தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி, பாதாள உலகக் குழுவின்ர எச்ச சொச்சங்கள் எங்கட வட மாகாணத்திலும் இருக்குது போல.

**விதானையார்:-** ஏன்? சாத்திரியார் எங்கட யாழ்ப்பாணத்தில நடந்த வாள்வெட்டுக்கள் கொஞ்சமோ. ஏன்? ஏது? எண்டு இல்லாமல், அந்தச் சம்பவங்கள் மறைந்து போயிற்று.

ஆனால் அந்த வாள் வெட்டுக்கள் தொடர்பில மீளவும் ஆராய்ந்தால், பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவரும்.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறது உண்மை தான். வெளிநாட்டில இருக்கிற எங்கட சிலர், வாள் வெட்டுக் குழுக்களுக்குக் காசு கொடுத்து இஞ்ச இருக்கிற தங்கட எதிரிகளைத் தாக்கிய சம்பவங்களும் இருக்குது.

இந்த விடயங்களில பொலிசாருக்கு நிறையத் தொடர்பு இருந்ததையும் மறுக்க முடியாது.

**கங்காணி:-** சரி, எதுக்கும் பொறுத்திருந்து பார்ப்பம்.

இப்ப தானே செவ்வந்தி யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் வந்து வந்து போகிறார்.

கிளிநொச்சியிலும் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எங்கட வடக்கில இருக்கிற பாதாள உலகக் குழுவும் இனித்தான் மேல வரப்போகுது.

**விதானையார்:-** சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட வேணுமெண்டால், முதலில பொலிஸ் தரப்பும் நீதி பரிபாலனமும் நேர்மையாக இருக்க வேணும்.

ஆனால் எங்கட நாட்டில இடம்பெறுகிற இலஞ்சம் ஊழல் தொடர்பில ஓர் ஆய்வு செய்தால், பொலிஸ் திணைக்களத்தின்ர இலஞ்ச ஊழல் தான் முதலிடத்தில இருக்கும்.

**சிறாப்பர்:-** அது மட்டுமல்ல விதானையார்; எங்கட சட்டத்தரணிகள் சிலரும் மோசடிகளுக்குத் துணை போயிருக்கினமாம்.

**மூப்பர்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** வடக்கு மாகாணத்தில இடம் பெற்ற காணி மோசடிகளுக்குத் துணையாக சட்டத்தரணிகள் சிலர் இருந்திருக்கினம் என்பதை அறியும் போது எங்கட இனத்தின்ர தலைவிதியை நினைத்து அழுகை தான் வருகுது.

எத்தனையோ பிள்ளைகள் மண் மீட்பிற்காகத் தங்கட இன்னுயிரைத் தியாகம் செய்த இந்த மண்ணில, எத்துணை தூரம் நேர்மையும் நீதியும் நிலை நிறுத்தப்பட்டிருக்க வேணும்.

எங்கட தமிழ் மக்கள் உரிமையோடு வாழ வேணும் என்பதற்காகத் தங்கட உடலில குண்டுகளைக் கட்டிக் கொண்டு, எதிரிகளின்ர முகாம்களில பாய்ந்த எங்கட பிள்ளைகளின்ர தியாகத்தை ஒருக்காய் நினைத்துப் பாருங்க.

அந்தப் பிள்ளைகளின்ர மண் பற்று- இனப் பற்று- அதற்காகத் தங்கட தாய், தந்தை, சகோதரங்களின்ர பாசத்தை எல்லாம் உதறித்தள்ளிவிட்டுத் தங்கட உயிரை ஆகுதியாக்கிய அந்தப் பிள்ளைகளின்ர ஒரே நோக்கம் தமிழினம் விடிவு பெற வேண்டும் என்பது தான். ஆனால் அந்தப் பிள்ளைகளின் உயிர் பிரிந்த இந்த மண்ணில கள்ளக்காணி எழுதுகிற சட்டத்தரணிகளும் இருக்கினம் எண்டால், எங்கட நிலைமை எப்படி என்பதை ஒருக்கால் சிந்தித்துப் பாருங்க.

**வாத்தியார்:-** ஒரு காலத்தில எங்கட அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் சட்டத்தரணிகளாக இருந்திருக்கினம்.

சுருங்கச் சொன்னால், தமிழர்களின்ர நேர்மையான அரசியல் என்பது எங்கட சட்டத்தரணிகளால தான் கட்டமைக்கப்பட்டது.

ஆனால் இப்ப யாழ்ப்பாணத்தில எட்டு சட்டத்தரணிகளுக்கு எதிராக வழக்கு நடப்பதாகக் கேள்வி. அதிலும் எட்டு சட்டத்தரணிகள் தாங்கள் எந்நேரமும் கைது செய்யப்படலாமெண்ட அச்சத்தில நீதிமன்றில முன்ஜாமின் எடுத்து வைத்திருப்பதாகவும் கேள்வி.

**விதானையார்:-** இதைவிட இன்னுமொரு சங்கதியும் இருக்குது.


**கங்காணி:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** கள்ளக்காணி எழுதின விவகாரத்தில சில சிரேஷ்ட்ட சட்டத்தரணிகள் புத்தியாகத் தங்கட யூனியர்கள் மூலம் அந்த உறுதிகளை எழுதியிருக்கினமாம். இதால இப்ப அந்த யூனியர்கள் தான் மாட்டுப்பட்டிருக்கினம்.

**சாத்திரியார்:-** அட, நாசமறுப்பு. சட்ட நுட்பங்களையும் நீதியின் உன்னதத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டிய சிரேஷ்ட சட்டத்தரணிகள், இளம் சட்டத்தரணிகளை சிக்கலில மாட்டிவிட்டிட்டுத் தாங்கள் தப்பிக் கொண்டினம் போல.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் எங்களிட்ட நேர்மையான சட்டத்தரணிகள் பலர் இருக்கினம். ஆனால் ஒரு சிலர் செய்கின்ற கீழ் நிலைச் செயலால் நேர்மையான சட்டத்தரணிகளுக்கும் தலைகுனிவல்லோ ஏற்படுகுது.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



தங்களை கைது செய்யக்கூடாதென சட்டத்தரணிகள் சிலர் முன்ஜாமின்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்


அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**மழையினால் நாடு முழுவதும் பாதிப்பு ஏற்படுகிறதே வியாசரே?**

ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்

குளத்தையும் ஆற்றையும் மண்மேடாக்கி கட்டடம் கட்டினால், கருங்கல் கல்லினைக் கொட்டி வீதியை உயர்த்தினால், தண்டவாளம் என்ற பெயரில் புகையிரதப் பாதையை மலை போலாக்கினால், உயிர் வேலிகளை அழித்து மதில்களைக் கட்டினால், நீர் வழிந்தோடும் வாய்க்கால்களுக்குள் குப்பையைக் கொட்டினால், கண்டபாட்டிற்கு மரங்களைத் தறித்து வீழ்த்தினால் இயற்கை குழம்பாமல் உங்களைக் கொஞ்சும் என்று நினைக்கிறீர்களா?

இயற்கையின் சமநிலையை அழித்து விட்டு மழை பெய்கிறது வெய்யில் கொழுத்துகிறது மழையும் வெய்யிலும் மாறி மாறிப் பிழந்தெடுக்கிறது என்று கூறிப் பயனில்லை.



எதிர் வீட்டு ரோஜா அழகாகப் பூத்துக் குலுங்குகிறது. பறித்தால் தவறா வியாசரே?

**நல்ல நண்பன், நல்ல எதிரி. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன வியாசரே?**

தேவா - மட்டுவில்

நல்ல நண்பனும் நல்ல எதிரியும் ஒரு நாளும் முதுகில் குத்த மாட்டான்.

நல்ல எதிரி தன் எதிரிக்கு முதுகில் குத்த சந்தர்ப்பம் இருந்தும் நெஞ்சில் குத்தும் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து குத்துவான். அப்போது தன் நண்பனில் விழும் குத்தை தன் நெஞ்சில் வாங்குவான் நல்ல நண்பன்.

**ஜனநாயகமா? பணநாயகமா? வெல்லும் வியாசரே?**

சர்வா - யாழ்ப்பாணம்.

அண்மையில் ஐஸ் போதையுடன் பிடிபட்ட ஒரு நபர் அவரைப் பிடித்த பொலிஸ் அதிகாரிக்கு ஒரு பெரும் தொகைப் பணத்தைத் தருவதாகவும் குறித்த விடயத்தை காதும் காதும் வைத்தது போல் முடித்து விடுவோம் என்றும் கூறியதாகவும் அதற்கு அந்த நேர்மையான அதிகாரி சம்மதிக்காமல் அவரை சட்டத்தின் முன் நிறுத்தியதாகவும் செய்தி ஒன்று இணையத்தில் பரவியதைப் பார்த்தேன்.

ஜனநாயகத்தை பணநாயகம் ஒரு நாளும் வெல்ல முடியாது. அப்படி வென்றால் அதுவே பிரளயம்.

**சுமை தாங்கியே சுமையாகிப் போனது. அழுத்தமான அலட்சியப் போக்கால் தானே வியாசரே?**

மகாலட்சுமி - உரும்பிராய்

ஒரு வீட்டில் எங்களுக்கு மதிப்பிருக்க வேண்டும் என்றால் எங்களிடம் ஏதும் பலம் இருக்க வேண்டும்.

அது பணமாகவோ அல்லது சொத்தாகவோ இருக்க வேண்டும்.

அதில்லாமல் நாம் நமது பிள்ளைகளுக்குத் தானே கொடுக்கின்றோம். அவர்கள் தானே எம்மை இறுதிவரை பார்ப்பார்கள் என்று நினைத்து மடமைத்தனம் ஏதும் செய்தால், அது எம் இருப்புக்கு குந்தகத்தை ஏற்படுத்திவிடும்.

நான் சொல்வது புரிகிறதா? அதாவது சொத்தை எழுதும் போது பின் உரித்து வைத்து எழுதுவது நன்று.

**ஆனைக்கும் அடிசறுக்கும் என்பார்கள். எனக்கோ அடிமேல் அடி சறுக்குகிறதே வியாசரே?**

ஹரின் - வடமராட்சி

சுடாத பொன் சிவக்காது. உளி தாங்காத கல் சிலையாகாது. அடி வாங்காத இரும்பு படிமானத்திற்கு வராது.

இப்படிப்பட்ட வரிகள் எதற்காக இருக்கிறது தெரியுமா?

எம்மை நாம் புடம் போட்டுக் கொள்ளவே. வாழ்வில் வெற்றியே இல்லை. தொட்டதெல்லாம் தோல்வியில் முடிகிறதே என்ற எண்ணத்தைத் தூக்கிக் குப்பையில் போடுங்கள்.

தோல்விகளை எடுத்து வெற்றிக்கான படிகளாக்குங்கள். உங்களை எவராலும் முந்தவும் முடியாது. வெல்லவும் முடியாது.

**எதிர் வீட்டு ரோஜா அழகாகப் பூத்துக் குலுங்குகிறது. பறித்தால்தவறா வியாசரே?**

இராமன் - நட்டாங்கண்டல்

தம்பி இராமன் உங்கள் பெயரிற்கும் நீங்கள் கேட்கும் கேள்விக்கும் கொஞ்சமும் தொடர்பில்லையே.

இராமா, எதிர்வீட்டு ரோஜா எவ்வளவு அழகாக இருந்தாலும் எம் வீட்டு செவ்வந்தி போல வராதல்லவா?

எதிர்வீட்டு ரோஜாவைப் பறிக்க உங்கள் கரம் மதில் தாண்ட மட்டும் அந்த ரோஜாவுக்குச் சொந்தக்காரன் பார்த்துக் கொண்டு நிற்பான் என்று நினைக்கிறீரா?

மண்டை பத்திரம் தம்பி இராமா.

**உண்மை எதுவென்று தெரியாமல் கத்தும் சிலபேரைப்பற்றி?**

இந்து - வதிரி

எமக்கு வந்தால் இரத்தம் மற்றவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னி என்ற மனநிலையில் இருப்பவர்களிடம் கொஞ்சம் உசாராக இருப்பது நல்லது.

முதலில் ஒருவரைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள். அவர் அப்படித்தான் என்று தெரிந்தால் மிகுதி நடப்ப தெல்லாம் நல்ல நகைச்சுவைப் படம் பார்ப்பது போலத்தானே.

எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மை அடி பணியாது. இதுவே நிச்சயம்.

**இலகுவில் படிப்பதற்கு வியாசரின் அறிவுரை என்ன?**

சகிதா - மந்துவில்

சிறுவயதிலிருந்தே உங்களுக்கு சங்கீதத்தில் விருப்பம் இருக்க வேண்டும்.

வெட்கப்படாமல் சபையில் பாடும் தைரியம் வேண்டும்.

அதைவிட நல்ல சங்கீத வித்துவானிடம் சங்கீத வகுப்பிற்குச் சென்று கேட்டுப் படிப்பது இன்னும் உங்களை வளப்படுத்தும்.

அது சரி சகிதா, நீங்கள் பாடல் படிப்பதைக் கேட்டீர்களா? பாடம் படிப்பதைக் கேட்டீர்களா?



ஜனநாயகமா? பணநாயகமா? வெல்லும் வியாசரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்

# தாஜுதீன் கொலை மர்மங்கள் நீங்குமா?

றக்பி வீரர் வசீம் தாஜுதீனைப் பின்தொடர்ந்து சென்ற டிபண்டர் வாகனத்தினுள் இருந்த அருண விதான கமகே எனப்படும் கஜ்ஜா 2011ஆம் ஆண்டுமுதல் 2013ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு அமைச்சில் சாரதியாகப் பணியாற்றியவர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஏ.எஸ்.பி மினுர சேனரத் செப்ரெம்பர் 30ஆம் திகதி மாலை திடீர் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி வசீம் தாஜுதீனை பின் தொடர்ந்த டிபண்டரில் இருந்த நபர் கஜ்ஜா என்றும் அவரது மனைவி விசாரணைகளின்போது தெரிவித்ததாகவும் அறிவிக்க இலங்கையின் அரசியல்களம் அலங்கமலங்கமாகியது. சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கஜ்ஜாவின் மனைவி வாக்குமூலம் கொடுத்தால் நாமல் ஏன் குழப்பமடைய வேண்டும் என்று வினவுகிறார். நாமல் ராஜபக்ஷ சம்பந்தமே இல்லாமல் அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டு முயலாமையாகிறார்.

கஜ்ஜாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவருக்கு 16, இளையவருக்கு 9 மற்றும் மகளுக்கு 6 வயதுகள். இந்த இளைய இரு பிள்ளைகளும் பெப்ரவரி 18, 2025 அன்று தந்தையுடன் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ராஜபக்ஷக்களுக்கு இப்படியெல்லாம் ஏவலாளிபோல உழைத்தேன் என்று ஊடகவியலாளர் சமுதித்தவினுடைய வலையொளிச் சனலுக்கு இரண்டு தடவை நேர்காணல் வழங்கியிருந்தார் கஜ்ஜா.

**கஜ்ஜாவின் மூத்தமகனின் ஊடக சந்திப்பு**

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அறிக்கைவந்த மறுநாள்கஜ்ஜாவின் மூத்தமகன் இந்துவர விதான கமகே ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். தன்னுடைய தந்தையைத் தன் தாயாரும் அவரோடு முறையற்ற தொடர்பைப் பேணிவந்த நபரும்தான் தீர்த்துக் கட்டியிருக்கவேண்டும். சம்பத் ராம நாயக்க எனப்படும் அந்த நபர் பக்கோ சமன் எனப்படும் இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டு அழைத்துவரப்பட்ட பாதாள உலகத் தாதாவிற்கு நெருக்கமான பெயர் வழி. இந்த சந்தேகம் தனது தந்தையின் சகோதரிகளுக்கு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார் அவர்.

இதுபற்றி தனது முகநூலில் ஒரு பதிவும் எழுதியிருந்தார். அத்துடன் தனது தந்தையின் கொலையைத் தொடர்ந்து ஒரு தொகை பணம் தனது தாயாரின் கணக்குக்கு கைமாற்றப்பட்டிருக்கிறது. இது மேலும் தனது தந்தையின் கொலையில் சந்தேகங்களை எழுப்புகின்றது என்றும் அவர் கூறுகிறார்.

**கஜ்ஜாவின் மனைவி ஊடக சந்திப்பு**

இதனைத் தொடர்ந்துதான் கஜ்ஜாவின் மனைவி வலையொளி தளத்திற்குப் பேட்டி ஒன்றை வழங்கினார். தன்னுடைய கணவர் 2009 ஆம் ஆண்டு மார்கழி வரை கரகம்பிட்டிய எத்தியாவத்த பேருந்து 76 வழித்தடத்தில் சாரதியாகப் பணிபுரிந்தவர் என்றும், ஊடகங்களில் இன்று அவதூறு சொல்லும் மூத்தமகன்: இந்துவர விதான கமகே தை 03, 2010 பிறந்ததாகவும் மகன் பிறந்த காலத்தில் தாம் கணவருடன் மகிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊரான நதமுல்லையில் இருந்ததாகவும் வலஸ்முல்ல - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்தில் தனது கணவர் சாரதியாக வேலைக்குச் சேர்ந்ததாகவும் கஜ்ஜாவின் மனைவி சொல்லியிருந்தார். அப்படி ஒருவருடம் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கும்போது ஒருநாள் பேருந்தில் கஞ்சா கடத்தி தனது கணவர் கஜ்ஜா பொலிஸில் பிடிபட்டதாகவும் தனது தந்தையும் கபிலதிஸ் சாநாயக்கவும் முன்னாள் தென் மாகாண உறுப்பினரும் சேர்ந்து தன் கணவரை எப்படியோ பிணையில் வெளியில் எடுத்தார்கள். அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சில் சாரதி வேலை கிடைத்ததாகவும் 2011 முதல் 2013 வரை அவர் பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிந்ததாகவும் கஜ்ஜாவின் மனைவி கூறினார். அதாவது வசீம் தாஜுதீன் இறந்த காலப்பகுதியான மே 17, 2012 கஜ்ஜா பாதுகாப்பு அமைச்சில்தான் பணிபுரிந்திருக்கிறார் என்பது அவரது மனைவியின் இந்த வாக்குமூலத்தின் மூலம் நிரூபணமாகின்றது. கஜ்ஜாவின் மனைவியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்திருந்த சிஐடியின் மேலதிக விசாரணைகளில் கஜ்ஜா வசீம் தாஜுதின் இறந்த காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சில்தான் பணிபுரிந்தார் என்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

இன்னும் ஒரு முக்கியமான விடயம் அரசசாட்சியாக இருக்க வேண்டிய கஜ்ஜாவை பக்கோ சமன் ஏதோ கஞ்சாக் கொடுக்கல் வாங்கல் தகராறில் ஒப்பந்த அடிப்படையில் கொலை செய்திருந்ததாகச் சொல்லியிருந்தார். கஜ்ஜாவின் கொலையைப் பெறுப்பெடுக்க மேலும் சில ரௌடிகள் தயாரக இருந்ததாகவும் ஒன்றும் அறியாத இருபாலகரும் சூடுபட்டு விழுந்து இறந்ததும் அவர்கள் பின் வாங்கியதாகவும் தெரிவித்திருந்தார் பக்கோ சமன். ஆனால் கைது செய்யப்பட்ட ஒப்பந்த கொலையாளிகள் வழங்கிய வாக்குமூலத்தில் தமக்கு காரணங்கள் எதுவும் தெரியாது என்றும், தாம் கஜ்ஜாவைக் கொல்ல முன்னர் பக்கோ



சமனைத் தொடர்புகொண்டு இருபிள்ளைகளும் கூட இருக்கிறார்கள் என்று சொன்னதும் பரவாயில்லை அடித்துச் சாத்திவிட்டுப் போ என்று பக்கோ சமன் சொன்னதாகவும் வாக்குமூலம் கொடுத்திருந்தார்கள்.

கஜ்ஜா இறந்த அன்று 11 மணிக்கெல்லாம் கஜ்ஜாவின் மூத்த மகன் கஜ்ஜாவிடம் இரவுச் சாப்பாடு கொத்துறொட்டி வாங்கி வரும்படி கஜ்ஜாவை கடைக்கு அனுப்பியதாகவும் கஜ்ஜா மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்ததும் இளைய பிள்ளைகள் இருவரும் ஏறிக் கொண்டதாகவும் ஒரு கதை சொல்லப்படுகின்றது.

எது எப்படியோ கஜ்ஜாவின் மகனைவிசாரிக்கசிஐடி இப்போது தயாராகிறது. அத்தோடு ஒன்றுக்கொன்று முரணான பதில்களைக் கொடுத்த கஜ்ஜாவின் சகோதரிகளையும் விசாரிக்க சிஐடி தயாராகிறது. எனின் இந்த விசாரணை எந்தக் கோணத்தில் நகரும் என்று பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கும். இந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் நாமல் மற்றும் இரண்டாவது மகன் யோஷித ஆகியோரும் வசீம் தாஜுதீனின் திட்டமிடப்பட்ட கொலையில் மிகப்பெரிய வகிபங்காளர்கள் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்கா உரை சொல்லும் கதை**

2017ஆம் ஆண்டு ஆவணி 15 ஆம் திகதி அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது கீழ்காணுமாறு போட்டுத் தாக்கியிருப்பார். 2012 ஆம் ஆண்டு வசீம் தாஜுதீன் கொல்லப்பட்ட தினத்தில் திம்பிரிகஸ்யாயவில் உள்ள எரிபொருள் நிலையத்தில் இருந்த கடையில் வசீம் தாஜுதீன் ஒரு தண்ணீர்ப் போத்தல் வாங்குகின்றார். தண்ணீர்ப் போத்தலை வாங்கிக் காருக்குள் வைத்துவிட்டு பயணத்தை ஆரம்பித்தபோது ஒரு டிபண்டர் வசீம் தாஜுதீனைப் பின் தொடர்ந்து வருகின்றது.

அந்த டிபண்டரைச் சிஐடி விசாரணைகளிலின் போது அடையாளம் கண்டுகொள்கிறது. டிபண்டரின் சரித்திரத்தைத் தேடிச் சென்றபோது அது சமூக சேவை அமைச்சுக்குச் சொந்தமானது என நிரூபணமாகிறது. அப்போது சமூகசேவை அமைச்சராகப் பீலிக்ஸ் பெரேரா இருந்தார். பீலிக்ஸ் பெரேராவிற்குச் சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய டிபண்டர்வாகனம் அது என்று. மேலும் தகவலைத் திரட்டி எடுக்கிறது சிஐடி. புதுவகையான அந்த டிபண்டரைச் சிரந்தி கண்டார். அதன்மீது அவருக்குப் பேரார்வம் ஏற்பட்டது.

"பீலிக்ஸ் அதை எங்களின் பாவனைக்குத் தந்துவிடுங்கள் என்று கேட்டுப் பெற்றுக் கொண்டாராம் சிரந்தி" பீலிக்ஸ் பெரேரா டிபண்டரின் சாவியைச் சிரந்திக்குக் கையளிக்கும் நிகழ்வின் போட்டோ என்னிடம் இருக்கிறது. அதற்குப் பிறகு என்ன நடந்தது. இந்த டிபண்டருக்கான எரிபொருள் செலவுகளைச் ஜனாதிபதிச் செயலகமே அப்போது பெறுப்பெடுத்தது ஜனாதிபதிச் செயலகத்தின் தரவுகளின்படி அந்த வாகனத்தை யோஷித ராஜபக்ஷ பாவித்திருக்கிறார்.

வசீம் தாஜுதீன் விவகாரத்திற்குப் பிறகு இந்த டிபண்டர் காணமல் போய் உள்ளது. சிஐடி அந்த டிபண்டர் ஹபரணையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்தபோது கண்டுபிடித்தது. வசீம் தாஜுதீன் கொல்லப்பட்ட இரவில் அவரது காரைப் பின்தொடர்ந்து ஒரு டிபண்டர் செல்கிறது. இது சிரந்தியின் சிரிலிய எனப்படும் நிதியத்திற்குச் சொந்தமான ஒன்று. இதை யோஷித ராஜபக்ஷ பாவித்திருக்கிறார். கடைசியில் நிறத்தை மாற்றி ஒழித்து வைத்திருக்கிறார்கள். இப்படி அத்தனையையும் கண்டுபிடித்த சிஐடி, வாக்குமூலம் வழங்கக்கூறி சிரந்தியை விசாரணைக்கு அழைத்தது.

அன்று பாராளுமன்ற உறுப்பினராய் டிபண்டர்கதை சொல்லும் அநுர குமார திசாநாயக்கா இன்று ஜனாதிபதி. அன்று சிஐடி பணிப்பாளராய் இருந்த கீர்த்திமிகு ஷானி அபயசேகர இன்றும் சிஐடி பணிப்பாளராய் இருக்கிறார். இதனால்தான் இந்த விசாரணைகள் மீது பொதுமக்களுக்குத் துளியளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது.

அநுர குமார திசாநாயக்கா அன்று சொன்னதைப் பார்க்கும்போது தாஜுதீனைப் பின் தொடர்ந்த டிபண்டர் வாகனத்தில்தான் கஜ்ஜா இருந்திருக்கிறார் என்று தெளிவாகுகிறது.

இன்று கஜ்ஜா உயிரோடு இல்லை. கேள்வி என்னவென்றால் அந்த டிபண்டரை யார் வைத்திருந்தார்கள் என்பதே.

Hisham.M.Vlog என்னும் வலையொளிப் பதிவிலிருந்தும் https://www.adaderana.lk, colombo telegraph.com, Lanka newsweb.net, www.lankae news.com, https://www.daily mirroronline.lk, bbc news.com, dbsjeyaraj.com, Morning.html, The Morning Telegraph.com, Tamil Guardian.com பதிவிலிருந்தும் தொகுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித தர்மத்தின் ஆதாரம் எது?



ஒரு துறவி... வேதம் கற்றவர். சதா இறை சிந்தனையிலேயே திளைத்திருப்பவர். "மகாஞானி" எனப் பெயர் பெற்றவர். தியானம், பக்தியைத் தவிர வேறொன்றையும் அறியாதவர். தானுண்டு, தன் பக்தி உண்டு என்று இருப்பவர். அவர் யாருக்கும் எதையும் கொடுத்ததுமில்லை. யாரிடமிருந்தும் எதையும் வாங்கியதுமில்லை. யாரையும் காயப்படுத்தியதுமில்லை. யாருக்கும் நல்லது செய்ததுமில்லை. ஒருநாள் ஆலமரத்தடியில் தியானம் செய்து கொண்டிருந்த அந்த மகான் இறந்து போனார்.

சித்ரகுப்தனுக்கு முன்னால் அவர் நிறுத்தப்பட்டார். "துறவியே... நீங்கள் செய்த தவத்தையும், இறை பக்தியையும் மெச்சுகிறோம். உங்கள் அறவாழ்க்கைக்காக, ஓர் உயர்குடியில், மரியாதைக்குரிய குடும்பத்தில் மறுஜென்மம் எடுக்கப் போகிறீர்கள்..." என்றார் சித்ரகுப்தன்.

அதைக் கேட்டு, துறவி அதிர்ந்து போனார். "என்ன, இத்தனை ஆண்டுகள் தவ வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன். ஒரு புழு, பூச்சிக்குக்கூடக் கேடு நினைத்ததில்லை. எனக்கு மறு பிறப்பா... முக்தி கிடையாதா?" என்று கதறினார்.

அந்தக் கேள்விக்கு பதில் தெரியாத சித்ரகுப்தன், துறவியை எமதர்மனிடம் அழைத்துப் போனார். துறவி, எமதர்மராஜனிடம்தான் வாழ்ந்த ஆன்மிக வாழ்க்கையை நினைவு கூர்ந்து விவரித்தார். "எனக்கு முக்தி வேண்டும்..." என்று கெஞ்சினார். எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்ட எமதர்மன், "துறவியே, மனித வாழ்க்கையின் சாராம்சத்தை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை.

உங்கள் பக்தி தூய்மையானது, நீங்கள் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை என்பதெல்லாம் உண்மைதான். அதேநேரத்தில், நீங்கள் ஒருபோதும் சக மனிதர்கள் மீது இரக்கம் காட்டியதும் இல்லை. உங்களுடையது பரந்துபட்ட அறிவு. அது படிப்பறிவில்லாத ஒருவருக்குக்கூட உதவவில்லை. உங்கள் மருத்துவ அறிவு, ஒரு நோயாளியைக்கூட குணப்படுத்த உதவவில்லை. உண்மையில், மனித தர்மத்தின் ஆதாரம், தன்னலமற்ற சேவை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேயில்லை. ஒவ்வொரு ஆன்மிக வாழ்க்கைக்கும் அடிப்படை, சக மனிதனை நேசிப்பது. அது உங்களிடம் இல்லை. என்ன செய்யலாம்?" என்றார்.

**பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்து நின்றார் துறவி.**

# ஆச்சி அறிவுரை



## பனையை நாம் காத்தால் பனை எம்மைக் காக்கும்

### பேராண்டி...

பனை மரம் வெளிநாடுகளிலை இருந்தால் இண்டைக்கு நாங்கள் பனம்பழம், பனாட்டு, நுங்கு, ஒடியல், புளுக்கொடியல் என்பவற்றை சிறப்பு அங்காடிக் கடைகளிலை ஆயிரம் இரண்டாயிரம் செலவழிச்சு வாங்கியிருப்பம் எண்டு ஈழத்தின் தலைசிறந்த வைத்தியர்களில் ஒருவரான டாக்டர். சிவன்சுதன் சொல்லியிருந்தார்.

ஓம் பேராண்டி, பனை ஈழத்திலை வளர்ந்திட்டுதே! அதால அதின்ர நன்மை எதையும் கருத்திலை எடுக்காமல் அதை அழிக்கிற வேலை செய்யிறதோட பனையின்ர பயனை அறியாமல் இருக்கிறம். விடுதலைப் புலிகளின்ர காலத்தில பனை வளம் காக்கப்பட்டது. அதிலை மாற்றுக் கருத்துக்கிடமில்லை. ஆனால் இப்பத்தைய நிலையைச் சொல்ல இயலாது. அந்தளவுக்கு பனை வளம் அழிக்கப்பட்டுக் கொண்டேயிருக்குது.

பேராண்டி, நாங்கள் சின்னப்பிள்ளையா இருக்கேக்க பனம் பழம் பொறுக்குறது எங்கட பொழுதுபோக்கு. பொறுக்கின பனம்பழங்களை கொண்டுவந்து மாட்டுக்குப் போட, அது அதை வடிவாச் சாப்பிட்டுட்டு, கொட்டையை மட்டும் விடும். அதை ஐயா எடுத்து குவியலாப் போட்டு வைப்பார்.

புரட்டாதி - ஐப்பசி மாதங்களிலை பனம்பாத்தி போடுவார். அதிலை பனங்கொட்டைகளை அடுக்கிறது எங்களுக்கு அலாதிப் பிரியம். வடிவா - நிரலா பனங்கொட்டையை பாத்தியிலை அடிக்கிட்டு அதுக்குமேல மண்போட்டு மூடி மாதத்தில இரண்டு முறை தண்ணீர் விட்டால் போதும்.

மாசி, பங்குனியில கிழங்கு நல்லா விளைஞ்சிடும். எந்தவித மருந்தும் இல்லாத ஆரோக்கியமானது பனங்கிழங்கு பேராண்டி. பனங்கிழங்கு சாப்பிட்டால் அந்தப் பரம்பரைக்கே சலரோகம் வராது எண்டு எங்கட ஐயா அடிக்கடி சொல்லுவார். இப்ப பனங்கொட்டை சேர்க்கிறவையும் இல்லை. பனம் பாத்தி போடுறவையும் இல்லை. வியாபார நோக்கத்தோட செய்யிற சிலர் இருந்தாலும் ஆத்மார்த்தமா செய்யிறதுக்கு ஆளில்லை. அதால ஒரு கிழங்கு நூறு ரூபா வரைக்கு விற்பனை செய்யினம்.

பேராண்டி, எங்கட தற்சார்பு பொருளாதாரத்திலை பனை மிக முக்கியமானது. பனையை நாங்கள் கவனிச்சா, பனை எங்களைக் கவனிக்கும்.

கவனிச்சு ஆரோக்கியமா வாழுவமா? கவனிக்காமல் விட்டு, ஆரோக்கியத்தைக் கெடுப்பமா? இது எதிர்கால சந்ததியின்ர கையில தான் அது இருக்குது.


**ஆச்சி வருவா...**


**மாவை.நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்





## நீங்கள் கவனித்ததுண்டா...

**நீங்கள் கவனித்ததுண்டா...** சமையலறையில் அவள் வியர்வையில் குளிக்கையில் "துடைத்துக் கொள்" என்று நீங்கள் நீட்டும் கைக்குட்டையில் அவள் மொத்தக் களைப்பும் துடைக்கப்படுவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** அவள் சோர்வாய் இருக்கையில் நெற்றியில் கை வைத்து "காய்ச்சலா" என்ற கரிசனத்தில் அவள் குளிர்ந்து போவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** அவள் சமையலை ரசித்து ருசித்து "சூப்பர்" எனும் போது அவள் வயிறு நிரம்புவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** சாப்பிட அமரும் போது "நீயும் உட்கார்" ஏனும் வார்த்தையில் அவள் அனைத்து உணர்வும் சிலிர்த்துக் கொள்வதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** அவள் பேசுவதை நீங்கள் ரசித்துக் கேட்டால் சிறு குழந்தையாய் அவள் சிலாகித்துப் போவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** பொன், பொருள், உடை என வாங்கித்தரும் பொழுதைவிட முழம் பூவை தலையில் வைத்து நெற்றி முத்தமிடுகையில் அவள் ஆனந்தப் பரவசம் அடைவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** யாரிடமும் அவளை விட்டுக்கொடுக்காத போது உங்களுக்காக உயிரையும்விட தயாராகி நிற்பதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** அவளிடம் மனம் விட்டு சிரித்துப் பேசும் போதெல்லாம் கவலையற்ற ஜீவனாய் அவள் மாறிப் போவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** வெளியிலோ வீட்டிலோ வரும் பிரச்சினைகளால் நீங்கள் தளர்ந்து நின்றால் அவள் துவண்டு போவதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** அவள் மீது நீங்கள் அக்கறை கொண்டவர் எனும் எண்ணத்தால் - அவள் தன்னை பலசாலியாகவும் பாக்கியசாலியாகவும் இறுமாந்து கொள்வதை!

**நீங்கள் கவனித்ததுண்டா...** நீங்கள் எங்கிருந்தாலும் அவளின் ஏழாம் அறிவும் மூன்றாம் கண்ணும் எப்போதும் உங்களை கவனித்துக்கொண்டே இருப்பதை!

**கவனியுங்கள் கணவர்களே...**

மனம் நிறைந்த இணையரின் அரவணைப்பும் ஆறுதலும் அன்பும் ஆதரவும் மட்டும் அவ்வப்போது வேண்டி - இதயம் ஒன்று உங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பதை!!!




அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## கவிதைத் கலசம்

# மரணத்தின் அவலம் செம்மணி




மரணத்தின் அவலம் செம்மணியில் தெரிகிறதே
இப்படி ஒரு கோரம் எம் மண்ணில் நடந்ததா
ஏங்கும் இதயங்களின் இதயத் துடிப்புதான்
நின்றுதான் போகுமே எலும்புக்கூட்டுக் காட்சிகள்

கனவு கலைந்து போகலாம் - கண்டதும்
காட்சிகள் மனதில் ஆணி அடித்தமாதிரியே
என்ன அவலம் என்ன கோலங்கள்
தமிழ் இன அழிப்பின் எச்சங்கள்

இன்னும் எத்தனை மனிதகுழிகளோ...!
புரட்டித்தான் பார்கணும் காலம் சொல்லும்
சிந்திக்க சந்திக்க சித்தம் கலங்குகிறதே
தமிழர் சீரும் சிறப்பும் சிதைந்துதான் போனதோ

**ஆக்கம் - எஸ்.பி.தனா**
**தெல்லிப்பழை**

# சமுதாய ஊனங்கள்



மருக்கடியான பேருந்தில்
ஆணழகன் போட்டி
வெற்றிக் கோப்பையுடன்
ஊனமுற்றோருக்கான
இருக்கையில் இருக்கின்றான்
மன ஊனமுற்ற ஒருவன்

பச்சை விளக்குக் காணாத
சிவப்பு விளக்குகாரியை
இதுவுமொரு பிழைப்பா
தூ... தூ... எனப் பேசி
அணைத்துச் சென்றான்
ஒரு வாடிக்கைக்காரன்

ஓடும் பஸ்ஸில் ஒருத்தி
மேலாடையை சற்று விலக்கி
குழந்தைக்குப் பால் ஊட்ட
தாய்மை மறந்த கண்கள்
உற்றுப் பார்த்து அதை
இரசனை செய்கின்றன

அரிசியில் மண் கல்
கலப்பது ஒரு கலை
ஆலை முதலாளி படுக்கையில்
ஒரு பிடி அன்னம் அருந்தாமல்
உயிர் போக இருக்கையில்
அவர் மண் கல் அரிசி
வாய்க்கரிசிக்கு காத்திருந்தது

**பிரமா.யதுர்சன்**
**கொக்குவில் இந்துக்கல்லூரி**

# இளைஞர் கூட்டணி காப்போம்



நாளைய உலகின் நாயகரே...
நிகழ்கால மானிடத்தின் மன்னர்களே!
நேற்றைய நினைவுகள் கசப்பாயினும்
இன்றைய விழிப்பினில் இணைந்திடுவீர்

மொழிகள் வேறென மோதும் நிலைவரின்
விழிகள் தூங்காது சமநீதி என்றிடுவீர்
இனங்களை இணைத்திட இலட்சியம் கொண்டிடில்
இனவாத நெறிதனை இலகுவில் கொன்றிடுவீர்

வேறுபாடு களைந்து யாவினமும்
வாழுகின்ற நாடென்று நாமுரைக்க
பாகுபாடு பிரிவில்லா இளைஞர்களின்
பெருங்கூட்டணியினைக் காத்திடுவோம்

**சாந்தையூர் வினிஸ்**
**பண்டத்தரிப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Discovery CHANNEL

# காட்டின் தலைமகன்; வனத்தின் காவலன்; ஆனால், கூச்ச சுபாவி...

## புலிகளின் இயல்புகள் தெரியுமா?



புலி ஒரு கூச்ச சுபாவியான விலங்கு. அது மனிதனைக் கண்டால் ஒதுங்கிப் போய்விடும். அப்படிப்பட்ட புலிகளின் வாழ்விடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்துக்கொள்ள, வேறு வழியில்லாமல் அவை மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைந்து விடுகின்றன. விளைவு, மனிதனோ அல்லது புலியோ, இருவரில் ஒருவர் இல்லாமல் போய்விடுகிறார்கள்.

புலி காட்டின் தலைமகன். வனத்தின் காவலன். புலியின் உறுமல் தான் காட்டின் மொழி. புலி வாழ்கிற காடுகள் வளமாக இருக்கும். அங்கு மான்கள் போன்ற தாவர உண்ணிகள் இருக்கும். அவை வாழ புல்வெளிகள் இருக்கும். புல்வெளிகள் இருந்தால், பெய்யும் மழைநீரை சேகரித்து வைக்கும் ஓடைகளும் இருக்கும்.

எல்லாவற்றுக்கும் மேல், புலி வாழ்கிற காடுகளுக்குள் மனிதர்கள் செல்லமாட்டார்கள். மனிதர்கள் செல்லாத காடுகள் அதன் தன்மை மாறாமல் இருக்கும். ஆக, ஒரு புலியின் இறப்பு என்பது, அது வாழ்ந்த சில சதுர கி.மீற்றர் நிலப்பரப்புக்கான இழப்பு என்று அர்த்தம்.

புலிகள்தான் உணவுச்சங்கிலியின் உச்சத்தில் இருப்பவை. புலி இல்லையென்றால், தாவர உண்ணிகள் பெருகி, அதனால் தாவரங்கள் அழிந்து, கூடவே ஓடைகள் மறைந்து, நமக்கு வர வேண்டிய நீர்வரத்துக் குறையும்.

புலிகள் வாழ்கின்ற காடுகளுக்கு மிக அருகாமையில் மனிதர்கள் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக்கொண்டு விட்டார்கள். மனிதன் காடுகளின் பரப்பளவை சுருக்கிக்கொண்டே செல்கிறான். விளைவு, புலிகள் மனிதர்களுக்கு மிக அருகில் வந்து தங்களுடைய உயிரை இழந்துவிடுகிறது அல்லது எதிர்ப்படும் மனித உயிர்களைப் பறித்துவிடுகிறது.

புலி என்பது காட்டில் தனித்து வாழ்கிற ஒரு விலங்கு. ஒவ்வொரு புலியும் தனக்கென்று சில சதுர கி.மீற்றர் தூரத்தை தன்னுடைய வாழ்விடமாகக் காட்டில் வைத்திருக்கும். தன்னுடைய வாழ்விடத்தில் பெறுகிற தாவர உண்ணிகளின் பெருக்கத்தைக் கட்டுக்குள் வைத்து, காட்டின் சமநிலை சீர்குலையாமல் பார்த்துக்கொள்ளும்.

தன்னுடைய வாழ்விட எல்லையை புலிகள் எப்படி நிர்ணயிக்கும் என்பது தெரிந்தால், ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். சிறுநீர் கழித்தும், மரங்களில் நகங்களால் கீறியும் தனக்கான எல்லைகளை ஆண் புலிகள் நிர்ணயிக்கும்.

ஓர் ஆண் புலியின் எல்லைக்குள் இன்னோர் ஆண் புலி வராது. ஆண் புலி ஒரு பெண் புலியுடன் இணை சேர்வதற்கு முன்னால், இன்னோர் ஆண் புலி இடைநுழைந்தால் அதனுடன் சண்டையிட்டு, அதை விரட்டிவிட்டுதான் இணைசேரும்.

பெண் புலி குட்டிகள் ஈன்றவுடன், அதற்கு பாதுகாப்பாக ஆண் புலி இருக்கும். ஆண் புலிகள் தங்கள் சர்வைவலுக்காக ஒரு யுக்தியை செய்யும். அதாவது, மற்ற ஆண் புலிகளுக்குப் பிறந்த ஆண் குட்டிகளைக் கொன்றுவிடும். எதிர்காலத்தில் தனக்கு வாழ்விட போட்டி வராமல் இருப்பதற்காக வளர்ந்த ஆண் புலிகள் இப்படி செய்யும்.

ஆண் புலிகளின் இந்த யுக்தியை வெல்வதற்கு பெண் புலிகளிடமும் ஒரு யுக்தி இருக்கிறது. தான் இணை சேர்ந்திருக்கும் ஆண் புலிக்குத் தெரியாமல் ஒரே நேரத்தில், அருகாமையில் இருக்கின்ற இன்னும் சில ஆண் புலிகளுடன் உறவு வைத்துக்கொள்ளும். இதனால், அந்தப் பெண் புலி ஈனும் குட்டிகளை எல்லா ஆண் புலிகளுமே தங்களுடைய குட்டிகள் என்று நம்பிக் கொல்லாமல் விட்டு விடும். குட்டிகளுக்கு 4 மாதங்கள் வரை தாய்ப்பால் கொடுக்கும் பெண்புலி. அதன்பிறகு, பதுங்குதல், பாயுதல், வேட்டையாடுதல் என அனைத்தையும் சொல்லிக் கொடுக்கும். குட்டிகளுக்கு ஒரு வயதான பிறகு, அது ஆண் புலி என்றால், அது தனக்கானத் துணையைத் தேடி செல்வதற்கு அனுப்பிவிடும்.

# தெளிவே என் சிந்தனையுள்... 33

மாடியிலிருந்து வீழ்ந்தவர் உயிர்பிழைத்து விட்டார். கால் தடக்கி நிலத்தில் வீழ்ந்தவர் மரணமடைந்தார் என்பதை விதி என்று ஒற்றை வார்த்தையில் சொல்லி முடித்துவிடுவார்கள்.

உண்மைதான், ஆயினும் சில விடயங்களை விதி என்று புறம் தள்ளிவிட முடியாது.

எனது இளம் வயதில் நான் இறை நம்பிக்கையில்லாதவனாகவே இருந்தேன். ஆயினும் எனது பூட்டனார், பேரனார், என் தந்தை ஆகியோருக்கு மிகுந்த இறை நம்பிக்கையுண்டு.

தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் எம் பரம்பரைக்கு திருவிழா ஒன்று உண்டு.

அன்று அதிகாலை சந்நிதிக் கோவில் திருவிழாவுக்குச் செல்வதற்காக மினி பஸ்ஸில் இளநீர், தேங்காய், வாழைக்குலை என்பவற்றை ஏற்றுவதற்காக நான் மினி பஸ்ஸின் மேல் கூரைத்தளத்திற்கு ஏறி கீழிருந்து தரும் பொருட்களை மேலே அடுக்கிக் கொண்டிருந்தேன். அனைத்துப் பொருட்களும் வைத்து முடிந்தன. மிகுதி ஒரு வாழைக்குலை மட்டும் என்னிடம் தரப்பட நான் அதை வாங்கியபடி நிமிர்ந்தேன்.

என் தலைமுடியில் ஏதோ தொடுவது போன்ற உணர்வு ஏற்படவே மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன், மின்சாரக் கம்பி வயர்.

எனக்கு நெஞ்சு படபடப்பு நீங்க இரண்டு மணித்தியாலங்கள் ஆனது. அன்றைய அந்த நிகழ்வு என்னை இறை சிந்தனையில் ஆழ்த்தியது.

நான் இன்று உங்களுடன் குருஜியாகப் பேச அதுவே முக்கிய காரணமானது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : உதய கீதம் (1985)
பாடியவர் : எஸ்.பி. பாலசுப்ரமணியம்
இசை : இளையராஜா
இயற்றியவர் : எம்.ஜி. வல்லபன்



என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ஆடுங்கள்
இசைக் கோலங்கள் இமை ஜாலங்கள் சுகம் தேடுங்கள்

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ஆடுங்கள்
இசைக் கோலங்கள் இமை ஜாலங்கள் சுகம் தேடுங்கள்

ஏனோ நெஞ்சம் தனனன தனனன பாடும் போது தன நனனா
தானே கொஞ்சம் தனனன தனனன சோகம் போகும் தன நனனா

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ஆடுங்கள்
இசைக் கோலங்கள் இமை ஜாலங்கள் சுகம் தேடுங்கள்

பார்வையில் ஆயிரம் சூரியன் ஏன் பாரியின் தேரிலே
முல்லையே சொல் வானவில் வார்த்தைகள் கேட்டதும் நீ
சேலையில் சீதனம் மூடினாய் ஏன்

பௌர்ணமி பௌர்ணமி புன்னகை
பால் மொழி கன்னிகை உன் மடி மல்லிகை
அதில் வரும் தினம் ஒரு புதுக் கனவு

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து...

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ...

ஏனோ நெஞ்சம் தனனன தனனன பாடும் போது தன நனனா
தானே கொஞ்சம் தனனன தனனன சோகம் போகும் தன நனனா

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ..

தேனிலா நாளிலே தாரகைப் பூ தேவதை கூந்தலில்
சூடவா நான் சாமரம் வீசிடும் மார்பிலே நான்
சாய்ந்ததும் ஓய்ந்ததே சரசமும் ஏன்

மௌனமோ ஓ மௌனமோ உன் மொழி
நாணமோ தாய்மொழி எண்ணமோ கண் வழி
தினம் தினம் தொடத் தொட தொடர் கதையோ

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ..

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ..

ஏனோ நெஞ்சம் தனனன தனனன பாடும் போது தன நனனா
தானே கொஞ்சம் தனனன தனனன சோகம் போகும் தன நனனா

என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ..
என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து..
என்னோடு பாட்டு பாடுங்கள் எல்லோரும் சேர்ந்து ..

ஏனோ நெஞ்சம் தனனன தனன்ன பாடும் போது தன நனனா
தானே கொஞ்சம் தனனன தனனன சோகம் போகும் தன நனனா

# கரூரில் கொல்லப்பட்ட 41 பேர், பின்னணியில் திருச்செங்கோடு சதி

நடிகர் விஜயின் கரூர் த.வெ.க கூட்ட நெரிசலில் 41 பேர் கொல்லப்பட்ட விடுயத்தில் ஆளாளுக்கு ஒவ்வொரு கதை சொன்னபடி இருக்கிறார்கள். இந் நிலையில், 'திருச்செங்கோட்டிலிருக்கும் கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸில் பணியாற்றும் வடமாநிலத் தொழிலாளர்கள் கூலிகளாக அழைத்து வரப்பட்டு, சதிச் செயல் அரங்கேற்றப்பட்டிருக்கிறது' என்றொரு புதுத் தியரி காற்றுவாக்கில் கசிந்துவந்தது. அதை மேற்கொண்டுத் தோண்டித் துருவப் போனால். அப்படியொரு டெக்ஸ்டைலே இல்லை என்பதுதான் செம டுவிஸ்ட்.

"த.வெ.க கூட்டத்தில் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் உள்ளே நுழைந்து அசம்பாவிதத்தை ஏற்படுத்தினார்கள்', ஆளும் கட்சி ஆட்கள் கூட்டத்துக்குள் அனுப்பப்பட்டார்கள்', தி.மு.க-வினர் கூட்டத்திற்குள் நுழைந்து விஜய் மீது செருப்பை எறிந்தார்கள்'... மொத்தத்தில் 'இதில் சதி இருக்கிறது' என்றேதான் ஆரம்பத்திலிருந்தே சொல்லி வருகின்றனர், த.வெ.க-வினர்.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே தமிழ்நாடு அரசு மற்றும் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தரப்பில் இதை மறுத்தே வருகின்றனர்.

அதேசமயம், விஜயின் கொள்கை எதிரியான பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணி தோழர்களான அ.தி.மு.க உட்பட அனைவருமே கரூரில் நடந்த்து சதிதான். உண்மையை வெளிக்கொண்டுவர சி.பி.ஐ விசாரணை வேண்டும் என்று முழங்கிக் கொண்டே இருந்தனர். அதன்படியே... "கரூர் சம்பவத்தை சி.பி.ஐ விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில்தான், 'அது என்ன சதியாக இருக்கும்?' என்று தேடிக் கொண்டே இருந்த நமக்கு, 'திருச்செங்கோட்டில் கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸ் என்கிற பெயரில் ஒரு நிறுவனம் இயங்கிவருகிறது. அந்த நிறுவனத்தில் பணியாற்றும் வடமாநில ஊழியர்களில் சிலர் கூலிக்கு பேசி வரவழைக்கப்பட்டு, திட்டமிட்டு கரூர் கூட்டத்தில் பிரச்சினையைக் கிளப்பினார்கள். இதனால் ஏற்பட்ட நெரிசலில்தான் 41 பேர் கொல்லப்பட்டனர்' என்கிற அந்த பகீர் தகவல் காத்துவாக்கில் வந்து சேர்ந்தது.

மேற்கொண்டு இந்த விடயத்தைப் பல தரப்பட்டவர்களிடமும் பேசியபோதும் உறுதியாக எந்தத் தகவல்களும் கிடைத்தபாடில்லை. 'அங்கே சொன்னார்கள்... இங்கே சொன்னார்கள்' என்றபடிதான் சொன்னார்களே தவிர, நேரடியாகத் தெரியும் என்று ஒருவரும் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் சொன்னதன் சாராம்சம், கொஞ்சம் பகீர் ரகமாகவே இருந்தது.

கரூர் எம்.எல்.ஏவும் முன்னாள் அமைச்சருமான செந்தில்பாலாஜியும் தி.மு.க-வின் கூட்டணியில் இருக்கும் 'கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.எல்.ஏவுமான ஈஸ்வரனும் நண்பர்கள். அந்த ஈஸ்வரனுக்கு 'கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸ்' உரிமையாளர் பழக்கம். அதை வைத்து, அங்கே வேலைபார்க்கும் வட மாநில ஊழியர்கள் 10 பேரை, விஜய் பங் கேற்ற கரூர் பிரச்சாரக் கூட்டத்துக்கு, அழைத்துச் சென்றுள்ளனர். அவர்களை வைத்துதான் திட்டமிட்டு கூட்டத்தில் கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த டெக்ஸ்டைல், முன்னாள் அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் பொன்.சரஸ்வதியின் தம்பியுடையது' என்று சொன்னார்கள். நம்பவும் முடியவில்லை.. [illegible]

இதையடுத்து, 'கீரீஸ்வரா டெக்ஸ் டைல்ஸ்' பற்றி இணையத் தளங்களில் தேடினோம். அந்தப் பெயரில் எந்த நிறுவனமும் சிக்கவில்லை. 'சரி, இணையதளத்தில் அந்த நிறுவனத்தின் பெயர் இடம்பெறாமல்கூட இருக்கலாம்' என்று நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொண்டு, திருச்செங்கோட்டுக்கே வண்டியை விட்டோம்.

போய் இறங்கினால்... திரும்பிய பக்கமெல்லாம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனங்கள். குறைந்தது 200 நிறுவனங்களாவது இருக்கும். அவற்றில் 90% தறி தொழிற்சாலைகள்தான். பலவற்றுக்கும் பெயர்ப்பலகைகள்கூட இல்லை.

திருச்செங்கோடு - சேலம் சாலை, திருச்செங்கோடு - பரமத்தி வேலூர் சாலை, திருச்செங்கோடு - ராசிபுரம் சாலை உள்ளிட்ட பல இடங்களில் செயற்பட்டு வரும் கைத்தறி, விசைத்தறி, ஆட்டோமெற்றிக் தறி போன்ற தொழிற்சாலைகளில் விசாரித்தோம். ஆனால், 'கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸ்' பற்றி யாருக்கும் தெரியவில்லை. தகவலில் பரவியபடி, திருச்செங்கோடு பட்டறைமேடு பகுதிக்குச் சென்று விசாரித்தபோது, அங்கு லொரி பட்டறைகளே அதிகம் இருந்தன. சில விசைத்தறி தொழிற்சாலைகளும் செயற்பட்டு வந்தன. ஆனால், பெயர்கூட இல்லாத அளவுக்கான மிகச்சிறிய விசைத்தறிக் கூடங்கள் அவை.

'கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸ்' என்ற பெயரில் அந்தப் பகுதியில் எந்த நிறுவனமும் இல்லை. வட மாநிலத்தைச் சேர்ந்த நபர்களும் அங்கு தென்படவில்லை. பெரும்பாலும் பெண்கள் மற்றும் வயதானவர்களே விசைத்தறி கூடங்களில் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். தொடர்ந்து, கைத்தறி, விசைத்தறி சங்கங்களின் பிரதிநிதிகளிடம் விசாரித்தபோது, அவர்களுக்கும் 'கிரீஸ்வரா டெக்ஸ்டைல்ஸ்' என்ற ஒன்றே இருப்பதாகத் தெரியவில்லை.

இதையடுத்து, அ.தி.மு.கழக முன்னாள் எம்.எல்.ஏ-வான பொன்.சரஸ்வதியைத் தொடர்புகொண்டு பேசினோம். "எனக்கு சகோதரர் யாருமில்லை. என் அலுவலகத்தில் உதவியாளராக பாலு என்பவர் உள்ளார். அவர் என் தம்பி மாதிரி, அவருக்கு டெக்ஸ்டைல்ஸ் .எதுவும் இல்லை. அலுவலகத்தைத் தான் பார்த்துக் கொள்கிறார்" என்று சொன்னார். இதற்குமேல் கொங்கு ஈஸ்வரன், செந்தில் பாலாஜி ஆகியோரிடமெல்லாம் விளக்கம் கேட்கத் தோன்றவில்லை.


ஆக மொத்தத்தில்,பொலிஸார் நடவடிக்கைக்குப் பின்னரும், கரூர், த.வெ.க கூட்டம் குறித்து, பல தியரிகள் நாள்தோறும் புதிது புதிதாக வெளி வந்து கொண்டே இருக்கின்றன. இப்போது விசாரணை சி.பி.ஐ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. "திருச்செங்கோடு தியரி" உட்பட த.வெ.கவினர் சொல்லிவரும் 'சதிக் கதைகளெல்லாம் உண்மையா, வதந்தியா என்கிற விவாதத்தை சி.பி.ஐ சீக்கிரமே முடித்து வைக்கும் என்று நம்புவோம்.

-விகடன் பிளஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கால உணவுகள்; சாப்பிட வேண்டியவை சாப்பிடக் கூடாதவை!

**"ஹைய்யா...! மழை" என துள்ளிக் குதிக்க வைப்பதும், "ஹைய்யோ...! மழை" என சலித்துக்கொள்ள வைப்பதும் என இரு வேறு உணர்ச்சிகளை நம்மிடம் இருந்து வரச் செய்வது இந்த மழைக்காலத்தின் சிறப்பு.**

இக்காலம் எப்பொழுது தொடங்குகிறது. இக்காலத்தில் என்னென்ன உணவுகளை எடுத்துக்கொள்ளலாம் எவற்றை தவிர்க்க வேண்டும்.

நீரைக் காய்ச்சி இளம் சூடாக அருந்துதல் மழைக்கால நோய் பரவும் அபாயத்தைப் பெரிதும் குறைக்கின்றது. சுக்கு, சீரகம் இட்டு காய்ச்சிய நீர் சாலச்சிறந்தது.

எந்த உணவாக இருந்தாலும் இளம் சூடாக அருந்துவது மழைக்காலத்தில் இருக்கின்ற மிகுந்த வாதத்தைக் குறைத்து உணவு மூலமாக பரவும் நோய்களை ஒழிக்கும்.

பொதுவாகவே மழைக்காலத்தில் ஜீரண சக்தி குறைவாக இருக்கும். ஆதலால், கஞ்சி வகைகள் மிகச் சிறந்தவை.

மழைக்காலத்தில் சூப் வகைகள் ஜீரண மண்டலத்தைத் தூண்டி இரத்த ஓட்டத்தை அதிகமாக்கி நம்மை சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும்.

பெருங்காயப் பொடி, பூண்டு பொடி, பருப்பு பொடி, கருவேப்பிலை பொடி, மிளகு குழம்பு, கொள்ளு ரசம், பிரண்டை துவையல், முள் முருங்கை அடை, முடக்கற்றான் தோசை, புளிச்சக்கீரைக் கடையல், கருணைக்கிழங்கு பொரியல், சுண்டை வற்றல் குழம்பு, தினை உருண்டை, எள்ளுருண்டை, கேழ்வரகு , முருங்கை அடை என ஜீரணத்திற்கு உகந்த உணவுகளை உண்ணலாம்.

அப்பிள், சாத்துக்குடி, மாதுளை, ஆரஞ்சு, பேரிக்காய், இலந்தை, சம்பு நாவல், பப்பாளி, பிளம்ஸ், பேரிக்காய், பெர்ரி வகைகள் மட்டும் எடுத்துக் கொள்ளலாம். இவையும் மழை காலத்திற்கான நோய் எதிர்ப்பு சக்தியினை அளித்து உடலை பாதுகாக்கும்.

தயிர், மந்தமான உணவுகள், கிழங்கு வகைகள், கீரை வகைகள், மா,பலா, வாழை, தர்பூசணி, முலாம்பழம், சீதாப்பழம், வெண்பூசணி, புடலங்காய், காலிஃப்ளவர், கோஸ், காளான், மீன் மற்றும் கடல் உணவுகள் போன்றவற்றை நீக்க வேண்டும். பச்சையான உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

குளிர்பானங்கள், பழைய, ஆறிப்போன உணவுகள், குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட உணவுகள், துரித உணவுகள், வறுத்த உணவுகள், சுகாதாரமற்ற முறையில் தயாரித்த உணவுகள் தவிர்க்கவும்.

காலையில் சுக்கு மல்லி காபி, ஆவியில் வேக வைத்த சிற்றுண்டி, பகலில் அரிசி சாதம், இளம் பச்சை காய்கறியில் செய்த பொரியல், கூட்டு, தாளிதம் செய்த மோர், மிளகு ரசம், முட்டையின் வெண்கரு, வெள்ளாடு, காடை, கருங்கோழி போன்ற மாமிசங்கள், முளைக்கட்டிய தானியங்கள், சூப் வகைகள், இரவில் தெவிட்டாத தேன் அல்லது மஞ்சள் கலந்த பால் போன்றவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

# அடுக்குத் தும்மல்... அவதானம் வேண்டும்!



**ஒவ்வாமை ஏற்படுத்தும் பாதிப்புகளில் ஒன்று, அடுக்குத் தும்மல். அதிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் ஒவ்வாமையைத் தவிர்ப்பது எப்படி...?**

**01.** காற்று மாசுபாடு. போக்குவரத்து நிறைந்த பகுதிகளில் அதிக நேரம் செலவிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தினமும் இருசக்கர வாகனம் ஓட்டுபவர்கள். வைப்பர் பொருத்திய ஹெல்மெட்டுகளைப் **(Wiper Helmet)** பயன்படுத்தலாம்.

**02.** படுக்கை விரிப்புகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வாய்ப்பிருந்தால். போர்வைகளை வெந்நீரில் அலசலாம். வாரம் ஒருமுறை படுக்கைகளையும் திரைச் சீலைகளையும் கட்டாயம் சுத்தப்படுத்த வேண்டும்.

**03.** வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பும்போது உங்கள் துணி. தலைமுடி. நீங்கள் அணிந்த செருப்பு அல்லது ஷூவில் ஒளிந்திருக்கும் ஒவ்வாமையைத் தூண்டும் ஒட்டுண்ணிகள் உங்களுக்குப் பிரச்சினையைத் தரலாம். எனவே. வீடு திரும்பியதும் வியர்வை அடங்கும்வரை ஓய்வெடுக்க வேண்டும். அதிகபட்சம் அரைமணி நேரத்துக்குப் பிறகு குளிக்க வேண்டும்.

**04.** அறைகளில் அழுக்குத் துணிகளைச் சேமித்து வைப்பது ஒவ்வாமைக்கு வழிவகுக்கும் என்பதால். முடிந்தவரை தவிர்ப்பது நல்லது. செருப்பு. ஸூக்களை வீட்டின் உள்ளே கொண்டுவரக்கூடாது.

**05.** வீட்டைவிட்டு வெளியே செல்லும் நேரங்களில். "மாஸ்க்" அணிந்துசெல்வது நல்லது. இவ்வை தவிர. எத்தகைய சூழல் உங்களுக்கு ஒவ்வாமையை உண்டாக்கி. தொடர்ச்சியான தும்மலைத் தருகிறது என்பதைக் கண்டறிந்து. முடிந்தவரை அதைத் தவிர்க்க வேண்டும். தேவையான மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

**06.** பருவநிலை மாற்றம் ஏற்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்னரே. மருத்துவரின் ஆலோசனையுடன் ஒவ்வாமைத் தடுப்பு மாத்திரைகளை உட்கொள்வது நல்லது.

# வாழைத்தண்டுப் பொங்கல்



## சமைப்போம் சுவைப்போம்

## தேவையானவை:

வாழைத்தண்டு ஒன்று (பொடியாக நறுக்கவும்)
பயத்தம் பருப்பு – 100 கிராம்
நெய் – 50 கிராம்
கறிவேப்பிலை – சிறிதளவு
மிளகு – 2 கரண்டி
சீரகம் – 2 கரண்டி
இஞ்சி – சிறிய துண்டு (பொடியாக நறுக்கவும்)
பச்சை மிளகாய் – 2 (நறுக்கவும்)
அரிசி – கால் கிலோ
முந்திரிப் பருப்பு – 25 கிராம்
தண்ணீர் – 4 கப்
உப்பு, மஞ்சள்தூள் (தேவைக்கேற்ப)



## செய்முறை

ஒரு குக்கரில் சிறிது நெய் ஊற்றி. பொடியாக நறுக்கிய வாழைத்தண்டை வதக்கிக்கொள்ளவும். அதனுடன் அரிசி. பயத்தம் பருப்பு. உப்பு. மஞ்சள்தூள். தண்ணீர் ஆகியவற்றை சேர்க்கவும். பின்னர் குக்கரை மூடி மூன்று முதல் நான்கு விசில் வரும்வரை வேகவிட்டு இறக்கவும். பிறகு ஒரு கடாயில் இன்னும் கொஞ்சம் நெய் ஊற்றி கறிவேப்பிலை. மிளகு. சீரகம். இஞ்சி. பச்சை மிளகாய் போட்டுத் தாளித்து முந்திரி போட்டு வேகவைத்துள்ள சாதத்தில் சேர்த்துக் கிளறினால் வாழைத்தண்டுப் பொங்கல் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

74

**செங்கை ஆழியான்**

26 ஆம் திகதி மண்டைதீவு சித்திவிநாயகர் கோயில் கொடியேற்றம் நிகழவிருந்தது. இராணுவம் வந்ததால் திருவிழா நடைபெறவில்லை இராணுவ ஆக்கிரமிப்பால் அங்கு சங்காரம் நிகழ்ந்தது. கோயிலின் குடையை இராணுவத்தினர் சென்றி நிழலாகப் பாவித்தனர். செத்துப்போன ஆடு, மாடுகளை திருமஞ்சனக்கிணற்றில் தூக்கிப்போட்டனர். கோயில் தேர்த்திருப்பணி மரங்கள் எரிக்கப்பட்டன. திருவிழாவிற்காக வாங்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன. மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயம் விமானத்தாக்குதலால் பலத்த சேதமடைந்தது. நற்கருணை நாதர் பெட்டி உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

அன்று அல்லைப்பிட்டி அலுமினியத்தொழிற்சாலைச் சுற்றாடலில் ஸ்ரீலங்கா இராணுவம் பலமான முகாம் ஒன்றினை அமைத்திருந்தது. பனை மரங்கள், மின்சாரக் கம்பங்கள் என்பன தறிக்கப்பட்டு உயரமான சென்றிகள் அமைக்கப்பட்டன. அன்று மாலையே அவ்விடத்தில் ஹெலி வந்திறங்கக் கூடியளவிற்கு முகாம் விஸ்தரிக்கப்பட்டது. அல்லைப்பிட்டிக் கிராமத்தின் எல்லைவரை அதாவது செட்டிக்கா வரை இராணுவ சென்றிகள் அமைக்கப்பட்டன. மண்டைதீவு மகாவித்தியாலயமும், றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் இராணுவ முகாம்களாகப் பாவிக்கப்பட்டன. மாகவித்தியாலயம் பிரதான முகாமாகவிருந்தது. அவ் வித்தியாசாலையின் முன்னுள்ள பனங்கூடலிருந்த அத்தனை பனை மரங்களும் தறிக்கப்பட்டு சென்றிகள் இடப்பட்டன. புல் டோசர்களினால் முன்காணிகள் மட்டமாக்கப்பட்டன. அதனால் இந்த முகாமிலிருந்து கோட்டையைப் பார்க்க முடிந்தது. 3000 இராணுவத்தினர் வரையில் இங்கு தங்கியிருந்தனர் எனக்கூறப்படுகின்றது.

மண்டைதீவில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பயங்கரமான நேரடி மோதல் நிகழ்ந்தது. இம்மோதலில் 44 போராளிகள் களப்பலியாகினர். முகாம் சுற்றாடலில் வாழ்ந்த பொதுமக்கள் பலர் காணாமல் போயினர். பத்துப்பேரின் சடலங்கள் காணப்பட்டன. ஒரு கிணற்றில் சுட்டுக் கொல்லப்பட்ட 43 பேரின் சடலங்கள் இடப்பட்டு அவற்றின் மேல் எரு வண்டி லோடு களிழ்த்து விடப்பட்டது. வீடுகள் இடிக்கப்பட்டன. ஒரு வீட் டில் தாய், சிறிய தாய், ஒருமகள் ஆகியோர் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் மனமுடைந்த தந்தையும் இன்னொரு மகளும் நஞ்சருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர். வீடுகளில் இருந்த சேலைகள் அனைத்தும் கிழிக்கப்பட்டன படுக்கைகளாகப் பாவிக்கப்பட்டன.

(தொடரும்)

# பேய்த் திட்டம்




167

## கடற்புறா

அக்ஷயமுனை ஆபத்திலிருக்கிறது" என்று இன்னொருவன் ஆரம்பித்தான்.

"இருக்கட்டும்," என்று இளைய பல்லவன் குப்பியின் வாயுடன் தன் வாயைப் பொருத்தி எடுத்தான்.

"பூர்வகுடிகள்" என்று இழுத்தான் முதலாமவன்.

"பூர்வகுடிகள், ஆம். அவர்கள்தான் பூர்வகுடிகள். நீங்கள் பின்னால் வந்தவர்கள். அவர்கள் ஊரை அவர்களிடம் விட்டுவிடுங்கள். ஓடிப் போய் விடுங்கள்." என்று தட்டுத் தடுமாறி உளறினான் இளைய பல்லவன்.

இரு தலைவரும் மிகுந்த வெறுப்புடன் அவனை நோக்கிவிட்டு அறையிலிருந்து அகன்றனர். மறுநாள் நிலை இன்னும் மோசமாயிற்று. கொள்ளைக் காரர் போர்க்கலங்கள் எல் லாம் இளையபல்லவன் உத்தரவுப்படி எங்கெங்கோ போய் விடவே துறைமுகத்திலும் காவல் இல்லை. காவல் செய்யக் கூடிய கடல் புறாவோ கரையில் இழுபட்டுக் கிடந்தது. எந்தத் திக்கிலும் சரியான காவல் இல்லாததால் சரியான ஆடையில்லாத பிச்சைக் காரியைப் போல் மிகப் பரிதாபமாகக் காணப்பட்டது அக்ஷயமுனை.

காவலை இழந்த துறைமுகத்தில் இரவில் குளு இனத்தாரின் படகுகள் நடமாடத் தொடங்கின. அவற்றை ஏதும் செய்ய வேண்டாமென இளைய பல்லவன் உத்தரவிட்டிருந்ததால் அவற்றினருகே கடல்புறாவின் மாலுமிகளோ படகுகளோ செல்லவில்லை. இதைக் கண்டும் மக்கள் அஞ்சினர். அக்ஷயமுனைக் கோட்டையை எந்தவிதக் கஷ்டமுமின்றி ஆள் சேதமின்றி, கைப்பற்ற அதை விடச் சிறந்த சமயம் ஏதும் கிடையாதென்பதை அறிந்த மக்கள் கலங்கினர்.

அதைக்கண்டு ஓரளவு பலவர்மனும் கலங்கினான். அவன் கலக்கத்துக்குக் காரணம் வேறு. அந்தக் காரணத்தைத் தன் மாளிகைத் தோட்டத்தில் அமாவாசைக்கு முதல் நாளிரவு வில் வலனைச் சந்தித்த அதே மரத்தடியில் கூறினான் பலவர்மன்.

அன்றும் ஆந்தையின் அலறல் கேட்டு, தோட்டத்துக்குச் சென்ற பலவர்மன் வில்வலனைக் கண்டதும் காட்ட வேண்டிய மகிழ்ச்சிக்குப் பதில் அச்சத்தையே காட்டினான். "பலவர்மா! நாம் அந்தப் படைத் தலைவனைப் பழிவாங்கும் சமயம் நெருங்கிவிட்டது." என்று குதூகலத்துடன் தொடங்கிய வில்வலனைக் கவலையுடனும் அச்சத்துடனும் நோக்கிய பலவர் மன். "வில்வலா! இளையபல்லவன் போக்கு எனக்கு எதுவும் பிடிபடவில்லை," என்றான்.

"என்ன அவன் போக்கு?" என்று வினவினான் வில்வலன். "அவனே இந்த நகரத்தின் காவலைப் பலப்படுத்தினான். ஆம் அவனே இப்பொழுது அதைப் பலவீனப்படுத்தியிருக்கிறான்." நமக்கு நல்லது தானே?"

"நல்லதுதான் உண்மையாயிருந்தால்"

"உண்மையாயிருக்காதென்று சந்தேகமா?"

ஆம். "அவன் குடிப்பதாகச் சொல்கிறார்களே "அதிகமாகக் குடிக்கிறான்." குடிகாரன் உத்தரவுகள் எப்படி இருக்கும்?

"எப்படியிருக்க வேண்டுமோ அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அத்தகைய குடிகாரன் உத்தரவை மற்றவர்கள் ஏன் நிறைவேற்றுகிறார்கள்?"

வில்வலன் சற்று யோசித்தான். "ஆம், அதை நாம் யோசிக்கத்தான் வேண்டும். இதில் ஏதாவது சூதிருக்குமோ என்று வில்வலனும் கவலையுடன் கேட்டான்.

(தொடரும்..:)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா

# ஆண் தேவதைகள்

## கண்மணி



சிறந்த சின்னத்திரைக் கலைஞர்களைக் கௌரவிக்கும் 2024ஆம் ஆண்டுக்கான விகடன் சின்னத்திரை விருதுகள் விழா நடைபெற்று வருகிறது.

இதில் செய்திவாசிப்பாளர் கண்மணியை 2024ஆம் ஆண்டின் "Best News Reader" ஆக தேர்வு செய்து விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இதில் நெகிழ்ச்சியாகப் பேசியிருக்கும் கண்மணி, "இந்தச் செய்தித்துறைக்கு, செய்தி வாசிப்பாளராக வந்து எட்டு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது", விகடன் விருதுதான் என்னுடைய முதல் விருது.

வாழ்க்கையில நிறைய ஏற்ற, இறக்கங்களை எதிர்கொண்டிருக்கிறேன். ரொம்ப உடைந்துபோய் உட்கார்ந்திருக்கிறேன். அப்போதெல்லாம், என் அப்பாதான் எனக்கு நம்பிக்கை கொடுத்து ஓட வைத்திட்டிருந்தார்.

என் வீட்டிற்கு ஓடிவந்து நிறையப் பிள்ளைகள், மாணவர்கள் "உங்களை மாதிரி ஆக வேண்டும் என்று ஆசை" என்று சொல்லுவார்கள்.

எல்லா பெண்களும் பணத்திற்காக வேலை செய்வதில்லை, சுயமரியாதைக்காகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் ரொம்ப முக்கியம். அவர்களுக்குக் கை கொடுக்கும் எல்லா ஆண்களும் என்னைப் பொறுத்தவரை "ஆண் தேவதைகள்" என்று நெகிழ்ச்சியாகப் பேசியிருக்கிறார்.



**பிரதீப் ரங்கநாதனின்** "டியூட்" படத்தின் இயக்குநர் கீர்த்தீஸ்வரன், சுதா கொங்கராவின் பட்டறையில் இருந்து வந்தவர். "சூரரைப் போற்று"வில் பணியாற்றியவர். "அதன் ஒளிப்பதிவாளரான நிகேத் பொம்மியின் குட்புக்கில் கீர்த்தீஸ்வரன் இடம்பெற்றுவிட, "டியூட்" படத்தின் தயாரிப்பாளர்களிடம் கீர்த்தியை அறிமுகம் செய்து வைத்து, அவரை இந்தப் படத்தின் (டியூட்) மூலம் இயக்குநராக உயரவைத்திருக்கிறார் நிகேத்" என்கிறார்கள்.



**கொஞ்ச நாட்களாக** திரைப்படங்களில் நடிக்காமல் இருந்த ஸ்ருஷ்டி டாங்கே, இப்போது கம்பேக். "மகா சேனா" என்ற படத்தில் விமலுக்கு ஜோடியாகியிருக்கிறார். பெரும்பகுதி காட்சிகளை, அடர்ந்த காடுகளில் படமாக்கியுள்ளனர். "இது காடு பற்றிய கதை மட்டும் அல்ல. மனிதன், இயற்கை, தெய்வீகம் இவற்றின் இடையிலான நம்பிக்கையையும் ஒற்றுமையையும் பற்றிப் பேசும் படம்" என்கிறார் விமல்.



**வெற்றிமாறன்** இயக்கத்தில் உருவாகும் படத்திற்காக சிலம்பரசன் கிட்டத்தட்ட 14 கிலோ வரை எடையை ஒரே மாதத்தில் குறைத்துவிட்டார். புரொமோ ஷூட்டிங் ஸ்பாட்டில் அப்படி எடை குறைந்த சிம்புவைப் பார்த்ததும் வெற்றிமாறனும், தயாரிப்பாளர் கலைப்புலி தாணுவும் ஆச்சரியப்பட்டு சிம்புவைக் கட்டியணைத்துக்கொண்டார்களாம். இந்த சந்தோஷ செய்தியுடன், அடுத்து நேரடி தெலுங்குப் படத்தில் சிம்பு நடிக்கவும் பேச்சுவார்த்தை நடக்கும் செய்தியும் சேர்ந்து கொள்ள... இணையத்தில் உற்சாகமாகப் பதிவிட்டு வருகிறார்கள் ரசிகர்கள்.



**விஜய் தேவரகொண்டாவுக்கும்,** ராஷ்மிகா மந்தனாவுக்கும் நிச்சயதார்த்தம் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது. அதேசமயம், சுறுசுறுப்பாக அடுத்தடுத்து படங்களில் நடிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார், விஜய் தேவரகொண்டா. தெலுங்கில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்ற "ராஜாவாரு ராணிகாரு" என்ற படத்தை இயக்கியவர், ரவி கிரண் கோலா. இவர், இயக்கவிருக்கும் அடுத்த படத்தில் வி.தே கமிட் ஆகியிருக்கிறார். இந்தப் படத்தில் கீர்த்தி சுரேஷ்தான் ஹீரோயின். கிராமப் பின்னணியில் நடக்கும் ஆக்ஷன் ட்ராமாவாம்.

**அஜயன்பாலா** இயக்கியிருக்கும் "மைலாஞ்சி" படத்திற்கு இசை, "இசைஞானி" இளையராஜா. இந்தப் படத்தில் அவருக்கு "சிம்பொனி செல்வன்" என்கிற புதுப் பட்டத்தைச் சூட்டியுள்ளனர். படத்தின் இசை வெளியீட்டுக்கு வந்த சீமான், "அவர் இசையமைத்த ஒவ்வொரு பாடலிலும், பாடல் வரிகளைத் தவிர்த்துவிட்டு, இசையை மட்டும் கேட்டால் அவை ஒவ்வொன்றும் ஒரு சிம்பொனிதான். அவர் சிம்பொனி செல்வன் அல்ல, இசைஞானி அல்ல, இசை இறைவன். இறைவனிடம் என்ன கேட்டாலும் கொடுப்பார். எல்லோரையும் மனதார வாழ்த்துவார். அதனால், அவரை "இசை இறைவன்" என்றே சொல்வேன்" என மேடையில் குஷி பொங்கப் பேசி ராஜாவை நெகிழ வைத்தார்.



# DD யின் கேள்வி?



சிறந்த சின்னத்திரைக் கலைஞர்களைக் கௌரவிக்கும் 2024ஆம் ஆண்டுக்கான விகடன் சின்னத்திரை விருதுகள் விழா இன்று நடைபெற்று வருகிறது.

இதில் 2024ஆம் ஆண்டின் சிறந்த தொகுப்பாளர் விருது" மா.கா.பா ஆனந்த்துக்கு வழங்கப்பட்டது. விருதை, தொகுப்பாளர் திவ்யதர்ஷினி (DD) வழங்க, மா.கா.பா ஆனந்த் பெற்றுக் கொண்டார்.

விருது விழா மேடையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி, கிரிக்கெட் வீரர் டோனி, நடிகரும் தவெக தலைவருமான விஜய் ஆகியோரிடம் கேட்க நினைக்கும் கேள்விகள் குறித்த ஜாலியான செஷன் திவ்யதர்ஷினியுடன் நடந்தது.

**ஜெயலலிதா**

எல்லோரும் 'Iron lady' என்று சொல்கிறோம். ரொம்ப கம்பீரமானவர் ஜெயலலிதா அம்மா. ஆனால் அவரிடம் இருக்கின்ற மென்மையான குணம் என்ன என்று கேள்வி கேட்பேன்.

**கலைஞர்**

மக்களுக்கு நிறைய திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார் கலைஞர் ஐயா. அவர் கொண்டு வர நினைத்து, கொண்டுவர முடியாமல் போன திட்டம் என்ன என்று கேட்பேன்.

**டோனி**

அவருக்குப் பயங்கரமான முட்டி வலி. அப்படியிருந்தும் கடைசி ஐபிஎல் சீசனில் விளையாடினார். மேட்சை முடித்துவிட்டு மருத்துவச் சிகிச்சைக்காகச் செல்வார். இவ்வளவு வலியிலும் உங்களால் எப்படிச் சிரிக்க முடிகிறது என்று கேள்வி கேட்பேன்.

**விஜய்**

"ஜனநாயகன்" தான் கடைசிப் படம் என்று சொல்லிவிட்டு, அரசியல் பாதையில் பயணிக்கவிருக்கிறார் விஜய் சார். அவரது ரசிகர்கள் கடைசிப் படம் ரிலீஸாகும்போது எப்படிக் கண்ணீர் விட்டு கதறப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த ரசிகர்களுக்கு நீங்க என்ன சொல்லுவீர்கள் என்று கேள்வி கேட்பேன்" என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

468

வலம்புரியின் மருத்துவச்சுடர்


## கருத்தரிப்பதற்கு முன் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்கள்...

சென்றவாரத் தொடர்ச்சி...

ஆகவே, கருத்தரிக்கும் போது, ஒரு பெண்ணின் Blood sugar level ஆனது கருவின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியமான குழந்தைக்கும் மிக மிக முக்கியமானதாகும். கருத்தரிக்கும் போது அவருடைய Blood sugar level மிகவும் அதிகமாக இருந்தால், ஒரு குறைபாடுடைய குழந்தை கூட பிறக்க வாய்ப்புண்டு. ஆகவே, Blood sugar level கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதா என அவதானிக்க வேண்டும். எல்லா பரிசோதனைகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தேவை ஏற்படின் மட்டும், சிறிய பரிசோதனைகளைச் செய்து உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ளலாம்.

மூன்றாவது, கர்ப்ப காலத்தில் Folic acid எடுப்பது மிக முக்கியமாகும். இது எமது நாளாந்த உணவில் காணப்படும் ஒரு விற்றமின் ஆகும். Folic acid ஆனது, சிசுவின் மூளை வளர்ச்சிக்கும், மண்டையோட்டின் வளர்ச்சிக்கும், முண்ணான் மற்றும் முள்ளந்தண்டு வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். ஆகவே, கர்ப்பம் தரித்த பெண்களுக்கு மேலதிகமான Folic acid மாத்திரை தேவைப்படுகின்றது. கர்ப்பம் தரிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த Folic acid மாத்திரைகளை எடுக்க தொடங்க வேண்டும். ஏனெனில், குழந்தையின் பெரும்பாலான அங்கங்கள் பன்னிரண்டு வாரங்களிலேயே உருவாகி விடுகின்றன. நீங்கள் சுகாதார வைத்தியரிடமோ அல்லது மகப்பேற்று மருத்துவ நிபுணரிடமோ செல்லும்போது பத்து அல்லது பன்னிரண்டு வாரங்களாகி விட்டால், பின்னர் Folic acid மாத்திரைகளை எடுப்பதில் எந்தப் பயனும் இல்லை. இது ஒரு சாதாரண விற்றமின் ஆனால் குழந்தையின் வளர்ச்சிக்கு மிக அவசியம். பலர் இதை மருந்தாக எண்ணுகிறார்கள், இதனை எடுத்துக் கொள்வதால் பல பிரச்சினைகள் ஏற்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். அது தவறாகும்.

நான்காவதாக தடுப்பூசி ஏற்றிக் கொள்வது முக்கியமாகும். உதாரணமாக, ஜேர்மன் சின்னமுத்து, ருபெல்லா போன்ற தடுப்பூசிகளை சிறுவயதிலே போட்டுக்கொள்ள வேண்டும். இந்நோய்கள் வயிற்றில் சிசு இருக்கும் ஒருவரைத் தாக்கினால் அதோடு இருபது வாரங்களுக்கு முதலே நோய் ஏற்படுமானால், 90% ஆன குழந்தைகள் குறைபாட்டுடன் தான் பிறக்கின்றன. ஆகவே தான், இலங்கையில் பாடசாலை செல்லும் போதே பெண் பிள்ளைகளுக்கு இந்த தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. நீங்கள் இந்த தடுப்பூசிகளை



பெற்றுக் கொண்டீர்களா என உங்களுக்கு சந்தேகம் இருந்தால், கருத்தரிப்பதற்கு முதலே, அதற்கான இரத்த பரிசோதனைகளைச் செய்து நோய் எதிர்ப்புத்திறன் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அப்படி அந்த நோய் எதிர்ப்புத்திறன் இல்லை எனில், குறித்த தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டு, இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின் நீங்கள் கருத்தரிக்கலாம். இப்போது அனைவரும் கவனம் செலுத்துவது Covid-19 தடுப்பூசி பற்றி ஆகும். இந்த தடுப்பூசி, ஆணினதோ அல்லது பெண்ணினதோ இனப் பெருக்கத் தொகுதியை பாதிப்பதில்லை என உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. கருத்தரித்த பின் ஓடித்திரிவதை விட, இப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போது, குழந்தைக்கு எதிர்ப்பார்த்திருக்கும் ஆணும் பெண்ணும் Covid 19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது சிறந்தது. இவை பெண்களுக்கான உடல் நல ஆலோசனை ஆகும்.

ஆரம்பத்தில் சொன்னது போல் உள ரீதியாகவும் உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், கர்ப்ப காலத்தில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் நடக்கின்றன. இவற்றை எதிர் கொள்ள உங்களை நீங்கள் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். பெரும்பாலான பெண்களுக்கு சில சில உள மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது சாதாரணமானதாகும். மிகவும் அரிதாக சிலருக்கு, உளப் பிறழ்வுகள் (Stress/ Depression) ஏற்கனவே உள்ளவர்களுக்கு கர்ப்பகாலத்தில் இது கூடலாம். அவர்கள் மட்டும் அதற்குரிய ஆலோசனைகளைப் பெற்று, தேவை ஏற்படின் அதற்குரிய மருந்துகளை எடுத்து உங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இது பெண்களுக்கான உளரீதியான தயார்படுத்தலாகும்.

கர்ப்பம் என்பது தம்பதியினருக்குரிய ஒரு விடயமாகும். ஆகவே, ஒரு ஆரோக்கியமான கர்ப்பத்திற்கு ஆரோக்கியமான முட்டை எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஆரோக்கியமான விந்தும் முக்கியம். ஆகவே, ஒரு ஆணின் உடல், உள ரீதியான நலம் அல்லது ஆரோக்கியம் மிகவும் முக்கியம். இதற்காக ஒரு ஆண் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணிற்கும் உடல் நிறை பராமரிப்பு மிகவும் முக்கியம். உடல் நிறை குறைந்தவர்கள், கூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் உடல் நிறை கூடியவர்கள், உணவு முறை மற்றும் உடற் பயிற்சி மூலம் நிறையை குறைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, ஆண்களும் தமக்கு இருக்கும் நாட்பட்ட மற்றும் பரம்பரையாக கடத்தப்படக்கூடிய நோய்கள் பற்றி கவனம் எடுக்க வேண்டும். அந்த நோய்களை அறிந்து, பரிசோதனைகளைச் செய்து, தேவை ஏற்படின் சிகிச்சைகளைப் பெற்று ஆண்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணிற்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்றால், அது பல்வேறு வகையில் அந்த ஆணில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களது விந்தின் வீரியம், உறவு தொடர்பான தொழிற்பாடு போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது போல் மற்றைய நோய்களும் அவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே ஆண்களும் அடிப்படையான பரிசோதனைகளைச் செய்து, மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதோடு மது, புகை மற்றும் போதைவஸ்து பழக்கம் அவர்களை மட்டுமல்லாது அவர்களது மொத்தக்குடும்பம் மற்றும் சமூகத்தையும் பாதிக்கின்றது. இவற்றை தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

உடல்நலம் போலவே, ஒரு கணவனின் உள நலமும், கர்ப்பம் தரிக்கும் பெண்ணில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஒரு ஆண் மிகவும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி இருந்தால். அது அவரின் விந்து அணுக்களை மற்றும் அவரின் தொழிற்பாடுகளைப் பாதிக்கும். ஆகவே, ஒரு கணவனின் உளநலம் அவர்களது மண வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் மிகவும் முக்கியம். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு உதவியாக இருந்து, அவர்களது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பங்கு கொண்டு பராமரிப்பது அவசியம். ஆகவே, உடல் மற்றும் உள ரீதியாக உங்களை நீங்கள் தயார்ப்படுத்தி, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம். (முற்றும்)

Dr. A. சிறீதரன்
பெண் நோயியல்
மகப்பேற்று வைத்திய
நிபுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிப்பண்ணையில் தீ விபத்து
## ஒரு இலட்சம் கோழிகள் உயிரிழப்பு

போலந்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கோழிப் பண்ணை ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கோழிகள் தீயில் கருகி உயிரிழந்தன.

தென்மேற்கு போலந்தில் உள்ள பால்கோவிசே கிராமத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆயிரக் கணக்கான கோழிகள் அடைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்த தகவலின் படி, அந்தக் கோழிப் பண்ணையில் சுமார் 1.3 இலட்சம் கோழிகள் வளர்க்கப்பட்டு வந்தன.

இந்த விபத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான கோழிகள் உயிரிழந்தன.

தீயணைப்பு வீரர்கள் இந்தப் பெரும் தீயை முழுவதுமாக அணைக்க 10 மணி நேரம் போராட வேண்டியிருந்தது. தீ விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை எவ்விதத் தகவலும் வெளியாகவில்லை. இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (8)

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை நிறுத்த 20 நாடுகள் தீர்மானம்

(மொஸ்கோ)

உக்ரைனுக்கு ஆதரவாக 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்து "ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை உலக சந்தையிலிருந்து நீக்க" உறுதியளித்துள்ளன.

இதன்மூலம் போரைக் கைவிட ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த முடிவு, இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தலைமையில் லண்டனில் நடைபெற்ற கூட்ட ஆதரவாளர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டது.

இது குறித்து ஸ்டார்மர் கூறுகையில், நாங்கள் ரஷ்யாவின் போர் இயந்திரத்துக்கான நிதி ஆதாரங்களை நிறுத்திக் கொண்டு வருகின்றோம்.

புடின் அமைதிக்காக தீவிரம் காட்டவில்லை. எனவே இந்த ஆண்டு உக்ரைனுக்கு ஆதரவாக எங்கள் நடவடிக்கைகள் தெளிவாக திட்டமிடப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் உள்நாட்டு சொத்துக்களை இலக்காகக் கொண்டு, அவற்றை பயன்படுத்தி உக்ரைனின் பாதுகாப்புக்கு நிதி உதவியை வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (8)

# சுமார் 15 ஆயிரம் நோயாளிகள் மருத்துவ சேவைக்காக காத்திருப்பு

(காசா)

காசாவில் இன்னும் பல உயிர்கள் ஆபத்தில் உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது பலவீனமான போர் நிறுத்தம் அமுலில் இருப்பதால், அவசர மருத்துவ சேவை தேவைப்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

சுமார் 15 ஆயிரம் நோயாளிகளுக்கும் மேற்பட்டோர் மருத்துவ சேவைக்காகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8)

# தாய்லாந்தின் ராஜமாதா காலமானார்

(கொழும்பு)

தாய்லாந்தின் தற்போதைய மன்னர் வஜிராலங்கார்னின் தாயாரான ராஜமாதா சிரிகிட் உடல்நலக்குறைவால் அவரது 93 ஆவது வயதில் காலமானார். ராஜமாதா சிரிகிட், தாய்லாந்தை மிக நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னரான பூமிபால் அதுல்யதேஜின் மனைவியாவார்.

ஒக்டோபர் 17 ஆம் திகதி முதல் இரத்தத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9.14 மணியளவில் பாங்காக்கில் உள்ள சுலாலோங்கர்ன் மருத்துவமனையில் காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது உடல் இறுதிச் சடங்கு வரை பாங்காக்கில் உள்ள கிராண்ட் பேலஸில் வைக்கப்பட உள்ளது.

1932 ஒகஸ்ட் 12 ஆம் திகதி ராஜமாதா சிரிகிட் உடைய பிறந்தநாள் அந்நாட்டில் அன்னையர் தினமாக கொண்டாடப்பட்டு பொது விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது.

தனது 18 வயதில் மன்னர் பூமிபால்ஐ அவர் சிரிகிட் திருமணம் செய்து கொண்டார். கடந்த 2016 இல் பூமிபால் காலமான பின் இவர்களது மகன் வஜிராலங்கார்ன் மன்னராக முடிசூடினார்.

2012 முதல் சிரிகிட் பொது வெளியில் அதிகம் தோன்றாமல் இருந்து வந்தார். தாய்லாந்தில் கிராமப்புற மேம்பாடு பெண்களின் கைவினை தொழில்களுக்கு உதவுதல், சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு மற்றும் பல்வேறு நலத்திட்ட பணிகளை சிரிகிட் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# மகளிர் உலக கிண்ண தொடர்;
## அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா

13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

நவி மும்பையில் நடைபெற்ற 24 ஆவது லீக் ஆட்டத்தில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இந்திய அணி 49 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 340 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீராங்கனைகளான பிரதிகா ராவல், ஸ்மிருதி மந்தனா ஆகியோர் சதமடித்து அசத்தினர். ஜெமிமா ரோட் ரிக்ஸ் 76 ஓட்டங்கள் குவித்தார்.

இதையடுத்து, 341 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. மழை காரணமாக 44 ஓவரில் 325 ஓட்டங்கள் இலக்கு மாற்றியமைக்கப்பட்டது. அந்த அணியின் புருக் ஹாலிடே தனியாளாகப் போராடி 81 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு வீராங்கனை இசபெல்லா இறுதி வரை போராடி 65 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில், நியூசிலாந்து 15 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 271 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது. (3)

# இரத்ததான நிகழ்வு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் 56 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்படும் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை சபையின் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி, இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (3)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்து வரவும்)

(C_4185)

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உள்ளது.

076 250 7911
076 617 9772

(5741)

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில், 42 ஆவது லேனில் இரண்டு அறைகள், இணைந்த குளியலறைகளுடன் கூடிய (AC/ NonAC) தொடர் மாடி வீடு, அறைகள் நாள், கிழமை. மாத வாடகைக்குண்டு.

075 278 6033

(5737)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970

(5645)

## வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றிற்கு 18 – 28 வயதுடைய ஆண் ஒருவர் தேவை. கணனி அறிவுடையவர் விரும்பத்தக்கது.

076 690 8977
076 690 8987

(5732)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில், நல்ல செம்மண் வளமுள்ள காணி 2 பரப்பாகவும், 4 பரப்பாகவும் விற்பனைக்குண்டு.

வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் ஏற்றது.

(5718)

077 129 8159

## வாகனங்கள் தேவை

உங்களிடம் CAR,VAN,LORRY இருந்தால் உங்களை எம்முடன் பதிவு செய்து உங்களுக்கான சவாரிகளை நாம் தருவோம் மாதாந்தம் 100,000/= க்கு மேல் சம்பாதிக்க முடியும்.
(Full Time/ Part Time)

PickMe இல.210.

கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.


077 473 7737, 076 944 7737

(C-324)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் - 1943.03.19

மறைவு - 2025.09.26



எங்கள் பாடசாலையின் நூலக ஆசிரியை திருமதி.சுபாசினி ஸ்ரீகாந்தன் அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர்

**சின்னத்துரை காந்திமதி**

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5740)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

குறித்த நிகழ்வு, கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து இரணைமடுவில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.



வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் அரசாங்கத்தினால் பொலிஸ் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதியில் உணவு அறை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி WPT. கொஸ்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எஸ்.ஜயமால், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(படம்:-கஜிந்தன்)



யாழ்ப்பாணம் , திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெற்றது. (சிவசாந்தன்)



புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலய இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் ஆலய பிரதம குருக்கள், ஆலய நிர்வாகிகள், கிராம மக்கள், பக்தர்கள் என பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினர். (படம்:-சதீஸ்)



சர்வதேச கை கழுவுதல் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும்-சென்னை லெஜென்ஸ் ரோட்டரிக் கழகமும் இணைந்து கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி டொன் பொஸ்கோ பாடசாலையில் மாணவர்களுக்கான சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர். (படம்:-சுபேசன்)




கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் , முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் கௌரவிக்கப்பட்ட 102 வயதுடைய கமலாம்பிகையுடன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பாலசுந்தரம் ஜெயகரன், உதவி பிரதேச செயலர் சர்மிளன் அபர்ணா மற்றும் முதியோர் சங்க உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஊடாக அண்மையில் கிளிநொச்சி அடம்பன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது. சிவேஸ்வரன் என்பவருடைய நிதிப்பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம்:-சுபேசன்)




முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளை தெற்கு சனசமூக நிலையம், 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பல ஆண்டுகள் இயங்காத நிலையில் இருந்து வந்தது. இந்நிலையில் குறித்த சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு அண்மையில் மக்களின் பாவனைக்காக மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகத்தின் ஏற்பாட்டில், லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இரத்ததான முகாம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த இரத்ததான முகாமில் ஆசிரியர்கள், 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் என அனைவரும் இணைந்து குருதிக் கொடை வழங்கியிருந்தனர். (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகம் சஞ்சிகை வெளியானது




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடான கலைமுகம் சஞ்சிகை 80 ஆவது அமுத இதழாக வெளியாகி இருக்கிறது.

திருமறைக் கலாமன்றத்தின் 60 ஆவது அகவை நிறைவு மற்றும் கலைமுகம் சஞ்சிகையின் 80 ஆவது மலராக, காத்திரமான பல படைப்புக்களுடன் திகழ்கிறது கலைமுகம்.

இம்மலரில் மிகக்காத்திரமான 22 கட்டுரைகள், 31 கவிதைகள், 8 சிறு கதைகள், 5 நூல் மதிப்பீடுகளுடன் இன்னும் பல ஆக்கங்களைத் தாங்கி 210 பக்கங்களைக் கொண்டு வெளியாகியுள்ளமை விசேட அம்சமாகும்.

"கலைமுகம்" படைப்புத் தேர்வில் எந்தவொரு பாரபட்சத்தையும் ஒருபோதுமே பார்த்ததில்லை. இதழின் நோக்கிற்கும் போக்கிற்கும் அமைய அப்படைப்புக்கள் இருக்கின்றனவா என்பதை மட்டுமே பார்த்துள்ளோம். அதிலும் கூட கட்டுரைகளில் சற்று இறுக்கத்தைக் கடைப்பிடித்தாலும், கவிதைகள், சிறுகதைகளில் சற்று மென்போக்கையே அவ்வப்போது கடைப்பிடித்து வந்துள்ளோம். இதனால் மறுபக்கத்தில் "இதையெல்லாம் ஏன் கலைமுகத்தில் போடுகிறீர்கள்" என்ற விமர்சனங்களும் எழாமலில்லை. எனினும் புதியவர்களின் வருகைக்கும் களம் கொடுக்க வேண்டும் என்றால் இவ்வாறான நெகிழ்வுத் தன்மைகளும் அவசியமாகவே படுகின்றன என கலைமுகம் சஞ்சிகையின் ஆசிரியர் கி.செல்மர் எமில் தலையங்கம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதனூடாக கலைமுகம் சஞ்சிகை எழுத்தாளர்களை என்றும் ஊக்குவிக்கும் ஓர் ஊக்கியாக செயற்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. (க-8)

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 17 பேரும், சந்தேகத்தின் பேரில் 580 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 267 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 176 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 23 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 21 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3635 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (8)

# வீதி விபத்தில் சிக்கி 2239 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டு இது வரையான காலப்பகுதியில் பதிவான விபத்துச் சம்பவங்களில் இரண்டாயிரத்து 239 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி முதல் இந்த மாதம் 23 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி இரண்டாயிரத்து 107 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இதில் இரண்டாயிரத்து 239 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நான்காயிரத்து 149 பாரதூரமான விபத்துக்களும் ஏழாயிரத்து 831 சிறு விபத்துக்களும் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் மூவாயிரத்து 295 விபத்துக்களில் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# கோப்பாய் சந்தியில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோப்பாய் சந்தியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

தனியார் பேருந்து, ஹைஹயேஸ் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன குறித்த சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து சம்பவித்தது.

இந்த விபத்தில் ஒருவர் படு காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். [illegible]

## இன்று ஒரு தகவல் 469

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் - உயர்வதற்கு வழிகள்.

அதைவிட்டுவிட்டு உட்கார்ந்த இடத்திலே இருந்துகொண்டு உயர போக வேண்டும் என்று கற்பனை கொண்டிருக்கக்கூடாது.

இண்டாவது செய்யும் தொழிலே தெய்வம்.

எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அந்த தொழிலுக்குரிய பெருமையை நாம புரிந்துகொண்டு அதிலே ஈடுபட வேண்டும். அதை விட்டுவிட்டு.. "என்ன சார் பிழைப்பு இது... இந்தத் தொழிலை மனுசன் செய்வானா?" என்று சொல்லிக்கொண்டு அந்தத் தொழிலையே தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறவர்கள் நம்மிலே பலபேர் உண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருத்தரை சந்தித்தேன்

திரைப்படத் துறை கலைஞர் அவர். (நடிகர் கே. கே. சௌந்தர்). அவரு ஒரு கதை சொன்னார். இப்போது நாம் பேசிக்கொண்டி ருந்தோமே இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாக தெரிந்தது.

அதாவது ஒரு பெரிய மலைப்பகுதி. அந்த மலை அடிவாரத்.திலே ஒரு சிற்பி உட்கார்ந்துகொண்டு சிலை வடித்துக்கொண்டி ருந்தான்.

கையிலே ஒரு சின்ன உளியை வைத்துக்கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக்கொண்டு இருந்தான்.

சிற்பம் செய்வது எப்பேர்பட்ட தொழில்... எல்லாராலேயும் முடியுமா அது? அப்படி இருந்தும் அந்த சிற்பிக்கு மன நிறைவு இல்லை.

வெயிலிலே உட்கார்ந்து வேலை செய்வது ரொம்ப கஷ்டமாக இருந்தது...! சிற்பியா வெய்யிலை நம் மேலே வீசுகிறான். நாமே அந்த சூரியனாக இருந்து விட்டால் இந்த கஷ்டம் இருக்காதே!

அதனாலே நாம அவனா மாறி விடுவதுதான் நல்லது என்று நினைத்தான். உடனே அவன் எண்ணம் நிறைவேறி விட்டது.

இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றிவிட்டது..! சிற்பி சூரியனாக மாறி விட்டான்.... இனிமேல் இந்த உலகத்திலே நம்மளை விட வலிமை உள்ளவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். சந்தோஷமாக இருந்தான். இந்த நேரத்திலே மேகங்கள் அந்த பக்கமாக நகர்ந்து வந்தது... கரு... மேகம்..! கூட்டமாக வந்து சூரியனை மறைத்து விட்டுது இப்போது சூரியனாக இருந்த சிற்பி நினைத்தான்!

"என்ன இது... என்னையே இந்த மேகம் மூடி மறைக்குது என்றால் அது என்னைவிட பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும்.

அதனாலே இனிமேல் சூரியனாக இருக்க வேண்டாம். நாம் மேகமாத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான். இயற்கை அவனை மேகமாக மாற்றிவிட்டது. மேகமாகமாறி வான வீதியிலே சந்தோசமாக உலா வந்து கொண்டிருக்கின்றான்.

எதிரிலே பெரிய பெரிய மலைகள்... உயர உயரமாக வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறது!

மேகம் வேகமாக போய் மலையிலே மோதிக்கொண்டது.

அந்த மலையை தாண்டி அப்பாலே போக முடியவில்லை!

இப்போது அந்த மேகம் நினைத்தது. நாம் எந்த தடையும் இல்லாமல் அந்தரத்திலே மிதந்து வருகிறோம்.

நம்மையே போகவிடாமல் தடுக்குது என்றால் அந்த மலைக்கு எப்பேர்பட்ட வலிமை இருக்க வேண்டும். இனிமேல் நாம் மேகமாக இருந்து பயன் இல்லை! மலையாக இருக்க வேண்டும்! அதுதான் பெருமை! என்று நினைத்தது!

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறி விட்டான். பெரிய மலை! பூமிக்கும் வானத்துக்குமாக நிற்கிறது!

இனிமேல் எந்த கஷ்டமும் இல்லை என்று நினைத்தது மலை!

இப்படி நினைத்துக்கொண்டிருக்கும் போதே கீழே ஏதோ சத்தம் கேட்டது. மலை குனிந்து பார்த்தது. கொத்திக்கொண்டிருந்தான் ஏதோ ஒரு சிற்பம் செய்துகொண்டிருந்தான். இப்ப அந்த மலை நினைத்தது.

மலையையே ஒருத்தன் உடைக்கிறான் என்றால் அவன் எப்பேர்பட்ட வலிமை உடையவனாக இருக்க வேண்டும். இனிமேல் மலையாக இருந்து பிரயோஜனமில்லை. மனுஷனா மாற வேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனுசனாக மாறிவிட்டது. மறுபடியும் ஒரு உளியை வைத்துக்கொண்டு பழையபடியே ஒரு கருங்கல் பாறையை கொத்திக்கொண்டிருக்கிறான் அந்த ஆளு! இந்தக் கதையிலே இருந்து என்ன தெரிகிறது என்றால், "தன்னுடைய உண்மையான பலம் என்ன என்பது தாவித்தாவி தடுமாறிக்கொண்டிருக்கிறான் மனுசன் என்பது தான்.

இனிமேலாவது நாம் அதைப் புரிந்துகொள்வோம்.

ஒரு குடும்பத் தலைவருக்கு விபரீதமாக ஒரு ஆசை வந்தது. அதாவது ஒரு நாள் முழுவதும் புடவை கட்டிக்கொண்டு மனைவி செய்கிற வீட்டு வேலைகள் சமையல் எல்லாம் தானே செய்யவேண்டும். மனைவியை ஆண் வேடம் போட்டு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். இதுதான் அந்த ஆசை.

அதே மாதிரி செய்து விட்டடான். பெண் வேடத்திலே சமையல் செய்து கொண்டிருந்தான். இருண்டு போய் விட்டது. இந்த சமயத்திலே வாசல் கதவு தட்டுகிற சத்தம் கேட்டது.

ஓடிப்போய் திறந்தான். பக்கத்து வீட்டு அம்மா கிடுகிடு என்று உள்ளே வந்து விட்டார். காப்பி பொடியோ எதுவோ வாங்குவதற்கு.

இவன் பயந்து போய் "கமலா அம்மா... நான் சுசிலா இல்லை, சுசீலாவோட கணவன். பெண் வேடத்துலே இருக்கிறேன் சும்மா ஒரு மாற்றத்திற்காக அப்படி என்றார்.

உடனே அந்த அம்மா - அருகில் வந்து "பயப்படாதே! நானும் கமலா இல்லை... கமலாவோட புருஷன்! இதுவம் ஒரு மாற்றத்திற்காக தான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய ஆராய்ச்சி விருது விழா யாழ்.பல்கலைக்கு மூன்று விருதுகள்







தேசிய விவசாய ஆராய்ச்சி சிறப்பு விருது வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

2023-2025 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சியாளர்களுக்கான சிறப்பு விருதினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ஈ.சி. ஜெயசீலன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி தர்மிலா ஜெயசீலன், கலாநிதி சுவந்தினி தெரின்ஷன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தல், அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கும், தேசிய விவசாயத் துறையின் நிலையான வளர்ச்சிக்கும் அவர்கள் வழங்கும் பங்களிப்பை பாராட்டும் நோக்கத்துடன் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (SLCARP) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ் விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்து வருகின்றது. (க-8)

### தெற்காசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

# குண்டு எறிதல் போட்டியில் யாழ். வீரருக்கு வெண்கலம்



தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான சிரேஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன் மிதுன்ராஜ் வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

4 ஆவது தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான சிரேஷ்ட பிரிவினருக்கு இடையிலான தடகள போட்டிகள் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்னாள் மாணவன் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் வெண்கல பதக்கத்தை கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார். (3-90)

# லங்கா பிரீமியர் லீக் போட்டிகள் இவ் வருடம் நடைபெறாது

### ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அறிவிப்பு

2025 ஆம் ஆண்டு திட்டமிட்டபடி லங்கா பிரீமியர் லீக் போட்டிகள் இந்த ஆண்டு நடைபெறாது என ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதங்களில் இந்தியாவுடன் இணைந்து இலங்கை நடத்தவுள்ள ஆடவர் இருபதுக்கு 20 உலகக் கிண்ண தொடரை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டிகளை நடத்துவதற்குத் தேவையான அனைத்து மைதானங்களும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தரங்களைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதற்காகவும், உள் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் முழுமையாக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் கவனமாகக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் வழிகாட்டுதல்களின்படி, 20 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டித் தொடரின் அனைத்து மைதானங்களும் உலகக் கிண்ண தொடர் அளவு மற்றும் தேவைகளைக் கையாளும் வகையில் சரியான நிலையில் இருக்க வேண்டும். இதன் விளைவாக, நாட்டின் கிரிக்கெட் வசதிகளைத் தயா ரிப்பதிலும் மேம்படுத்துவதிலும் வளங்களையும் கவனத்தையும் செலுத்த அனுமதிக்கும் வகையில், லங்கா ப்ரீமியர் லீக் 2025ஐ மிகவும் பொருத்தமான கால அவகாசத்தில் பூர்த்தியமைக்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் முடிவு செய்துள்ளது.

### ஒரு வெற்றி கூட இல்லை!

# ஐ.சி.சி மீது அதிருப்தி வெளியிட்ட பாகிஸ்தான் மகளிர் அணித் தலைவர்



ஐ.சி.சி கண்டிப்பாக நல்ல சூழ்நிலையில் அமைந்துள்ள மைதானங்களை தெரிவு செய்ய வேண்டும் என பாகிஸ்தான் மகளிர் அணித்தலைவர் பாத்திமா சனா தெரிவித்தார். நேற்று முன்தினம் நடைபெற இருந்த இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

தாமதமாக தொடங்கிய போட்டி 34 ஓவர்களாக குறைப்பட்டு, முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 4.2 ஓவர்களில் 18 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மீண்டும் மழை குறுக்கிட்டதால் நிறுத்தப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

ஆனால் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று திரும்பலாம் என்று நினைத்த பாகிஸ்தானுக்கு இது பெருத்த ஏமாற்றமாக அமைந்தது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பாகிஸ்தான் அணித்தலைவர் பாத்திமா சனா, "சமீப காலங்களில் நாங்கள் அதிக கிரிக்கெட் விளையாடவில்லை. ஒரு தொடருக்குப் பிறகு நாங்கள் தகுதி பெற்றோம். எனவே, உலகக்கிண்ணத்திற்கு பிறகு எங்களுக்கு நிச்சயமாக இன்னும் நிறைய கிரிக்கெட் வாய்ப்புக்கள் தேவை என்று நான் நினைக்கிறேன்.

ஐ.சி.சி கண்டிப்பாக நல்ல மைதானங்களை உலகக்கிண்ணத்திற்கு என தயார் செய்ய வேண்டும்.

ஏனெனில் நாங்கள் நான்கு ஆண்டுகள் காத்திருந்து விளையாட வருகிறோம்" என தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டும் என்பதே உண்மையான போராட்டம்.
– சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணையை தீர்மானிப்பது யார்?

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லையென பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றுமுன்தினம் (24) பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் எனக் கூறிய பிரதமர்; சர்வதேச விசாரணைகள் உள்ளக செயன்முறைகளுக்கு இடையூறாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

இங்குதான் பிரதமர் ஹரிணி அமரசூரிய தான் ஒரு சிங்களப் பிரதமர் என்பதை நிரூபித்துள்ளார்.

ஆம், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் போர்க் குற்றத்தை ஏற்படுத்திய தரப்பே விசாரணையை நடத்துவதென்பது விசித்திரமானது.

இங்கு போர்க்குற்றம் இழைத்தவர்கள் படையினர். பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்.

ஆக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இங்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்தி வருகின்றனர்.

ஆம், பிரதமர் ஹரிணி அமரசூரியவை பிரதமராகக் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சி அமைந்து ஒரு வருடங்களே ஆகின்றன.

ஆனால், இந்த மண்ணில் போர்க்குற்றம் நடந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன.

போர்க்குற்றம் தொடர்பில் உள்ளகப் பொறிமுறையூடாக விசாரணை மேற்கொள்ளப்படும் எனக் கடந்த கால அரசுகள் தெரிவித்து வந்தன.

ஆனால் இன்றுவரை உள்ளகப் பொறிமுறை ஊடாக எதுவும் நடந்தாகவில்லை.

அப்படியானால், உள்ளகப் பொறிமுறை தோல்வியில் முடிந்துள்ளது என்பது உறுதியாகிறது.

தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உள்ளகப் பொறிமுறை நீதியைப் பெற்றுத்தராத காரணத்தால், உள்ளகப் பொறிமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்ற உண்மையை பிரதமர் ஹரிணி உணர்ந்திருக்க வேண்டும்.

அதேநேரம் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் இல்லை எனப் பிரதமர் கூறியபோது, தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து; அம்மணி! தாங்கள் கூறுவது ஏற்புடையதல்ல. உள்ளகப் பொறிமுறை தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரவில்லை.

ஆகையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கை இழந்துள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின், அவர்கள் நம்புகின்ற – ஏற்றுக்கொள்கின்ற சர்வதேச விசாரணையே அவசியமாகும் எனக் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறுவது அரச தமிழ் எம்.பிக்களின் தலையாய கடமை.

எதுஎவ்வாறாயினும் சர்வதேச விசாரணை தவிர்ந்த வேறு எந்த விசாரணையும் இந்த நாட்டில் ஒற்றுமையை – அமைதியை – சமாதானத்தை ஏற்படுத்தமாட்டாது.

மாறாக, உள்ளகப் பொறிமுறை என்ற எண்ணக்கரு ஆளுந்தரப்பிடம் இருக்கும்வரை பிரிவினை என்ற நினைப்பு தமிழ் மக்களின் மனங்களை ஆட்கொள்ளும் என்பது நிச்சயமான உண்மை.

– குடியிருக்க காணியின்றி மக்கள் –

# சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் 600 ஏக்கர் காணி அபகரிப்பு முயற்சி

(மணற்காடு)

வடமராட்சி கிழக்கு மணற்காடுப் பகுதியில் சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் 600 ஏக்கரைக் கையகப்படுத்தும் முயற்சிக்கு மணற்காடு கிராம மக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றையதினம்மணற்காடு கிராம அமைப்புகள் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில் இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட கிராம மக்கள் கற்கோவளத்திற்கும் மணற்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும், மணற்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும் சுற்றுலாத் தேவைகளுக்காக அபகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற உள்ளன.

இதனை உடனடியாகக் கைவிட வேண்டும். மணற்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்கு குடியிருக்க காணியில்லாத நிலையில் தனியார்களுக்கு இவ்வாறு காணிகளை வழங்கும் முயற்சி ஏற்றுக்கொள்ள முடியாது.

இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

எனவே சம்மந்தப்பட்ட தரப்புகள் உரிய கவனமெடுத்து குறித்த 600 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கையை உடனடியாகத் தடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

(ம-7,104)

# கச்சாயில் இளைஞன் மீது பொலிஸார் மிலேச்சத்தனமாக துப்பாக்கிச் சூடு

## உறவினர்கள் குற்றச்சாட்டு

(கொடிகாமம்)

கொடிகாமம் கச்சாய் பகுதியில் வெள்ள நீர் தேங்கும் இடத்தில் கிணறு வெட்டிய மண்ணை உழவு இயந்திரத்தில் கொட்டிக் கொண்டிருந்த இளைஞன் மீதே பொலிஸார் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக இளைஞனின் உறவினர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் அப்பகுதியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் மதுசன் (வயது 18) என்ற இளைஞன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந் நிலையில் இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த இளைஞனின் உறவினர்கள், பொலிஸாரின் செயற்பாடு குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

அப்பகுதியில் தோண்டப்பட்ட கிணற்றின் மண்ணை, அருகிலுள்ள கடையொன்றின் முன்பாக தேங்கும் வெள்ள நீரைத் தடுப்பதற்காக உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்து கொட்டிக் கொண்டிருந்தபோதே, கடற்கரையில் நின்ற பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

"துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய தேவை அங்கு இருக்கவில்லை. சந்தேகம் ஏற்பட்டிருந்தால், அருகில் வந்து விசாரித்திருக்கலாம்.

ஆனால், உழவு இயந்திரத்தில் தப்பிச் செல்ல முற்பட்டவர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம் என பொலிஸார் கூறுவது பொய் என்றும், மணலை ஏற்றியவாறு மணிக்கு 100 கி.மீ வேகத்தில் உழவு இயந்திரத்தால் தப்பியோட முடியுமா? எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்துடன் உழவு இயந்திரத்தின் பின் பகுதியில் இருந்து சுடப்பட்டதற்கான அடையாளங்கள் இல்லை எனவும், பக்கவாட்டில் இருந்தே சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான அடையாளங்கள் சக்கரங்களில் காணப்படுவதாகவும் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தந்தை ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே நோய்வாய்ப்பட்டு இறந்த நிலையில், குடும்பத்தை உழைத்து காப்பாற்றி வந்த ஒரே நபராக இருந்த இளைஞன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்து முறையாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும் என்றும் இளைஞனின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ம-7,33)

# வான் - டிப்பர் விபத்து ஒருவர் உயிரிழப்பு

## எட்டுப் பேர் காயம்

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு - பொலநறுவை பிரதான வீதியில் வாழைச்சேனையிலுள்ள வாகனேரி பகுதியில் வான் ஒன்றும் டிப்பர் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெலிகந்தையைச் சேர்ந்த 74 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த [illegible] எட்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பவுசர் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்ட வான், எதிர்த்திசையில் இருந்து வந்த டிப்பருடன் மோதியதாகப் பொலிஸாரது ஆரம்பகட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது.

(ம-7)

# ரஜமஹா விகாரையில் புத்தர் சிலை மாயம்

(மஹியங்கனை)

வரலாற்று சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விகாரையின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 40 கிலோ எடையுடைய பெறுமதிமிக்க புத்தர் சிலை ஒன்று இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டியை உடைத்து உள்ளே இருந்த பெறுமதிமிக்க புத்தர் சிலையை திருடிச் சென்றுள்ளதாக அவரது முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விகாரையில் உள்ள சிசிரிவி கமராவில், இனந்தெரியாத இரண்டு நபர்கள் நள்ளிரவு ஒரு மணி அளவில் அருங்காட்சியகத்திற்குள் நுழையும் காட்சிகள் பதிவாகியுள்ள நிலையில், அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

# வான் மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

ரத்மலானை - கொளுமடம சந்தியில், வான் ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் குறித்த வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளார்.

தங்களது கட்டளையை மீறிச் சென்றமையினாலேயே, குறித்த வான் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் கலைக்கிளி, இளங்கலைஞர் விருதுகள்




(கிளிநொச்சி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ் விழாவில் கலைஞர்கள் கலைக்கிளி, இளங் கலைஞர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு தேசிய இலக்கியப் போட்டி,மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கலைமன்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர். (8)

## பணியாளர் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சேவை சந்தையில் துப்பரவு பணியாளருக்கும் தனியார் வாகன உரிமையாளர் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தில் துப்பரவு பணியாளர் தாக்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி சேவை சந்தையில் துப்பரவு பணிகளை முழுத்து வெளியே வரும் வழியில் தனியாரின் வாகன மொன்று குறுக்கே நிறுத்தப்பட்டிருந்ததால் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில் குறித்த வாகன உரிமையாளர் துப்பரவு பணியாளர் மீது தாக்கியுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான குறித்த பணியாளர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-271)

## ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட 15 கியூப் மணல் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (3)

## சூரன் போர் நிகழ்வு

(கரணவாய்)

புலோலி அருள்மிகு வில்லி பாதி முருகன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை சூரன் போர் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி விஷேட பூஜை இடம்பெற்று சூரன் போர் நிகழ்வு நடைபெறும். அத்துடன் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் பாறணைப் பூஜையும் மாலை 6.30 மணியளவில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது. (3-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 300 | 200 | 120 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 200 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 | 250 | 180-200 | 170 |
| தக்காளி | 250 | 250 | 250 | 200 | 180 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 150 | 200 | 80 |
| கோவா | 200 | 180 | 200 | 240 | 180 | 110 |
| கரட் | 280 | 250 | 250 | 250 | 180 | 150 |
| பூசணி | 80 | 80 | 100 | 80 | 50 | 25 |
| புடோல் | 200 | 250 | 150 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 160 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 250 | 300 | 150-240 | 210 |
| பெரிய வெங்காயம்' | 180 | 180 | 150 | 160 | 130 | 135 |
| பாகற்காய் | 600 | 450 | 500 | 600 | 450 | 250 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 300 | 160 | 110 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 300 | 200 | 200 |
| பயற்றங்காய் | 550 | 550 | 500 | 600 | 500 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 300 | 160 | 140 |
| பீற்றூட் | 150 | 120 | 250 | 160 | 100 | 80 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 400 | 400 | 270 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 | 400 | 120 | --- |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 | 380 | 330 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 120 | -- | -- |
| தேசிக்காய் | 1500 | 1800 | 2000 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 210 | 150 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 900 | 1000 | 700 | 600 | 750 |
| வெங்காயப்பூ | 400 | 250 | 500 | 450 | - | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | -- | 60 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 100 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | -- | -- |

# இராசிபலன்

26.10.2025
ஐப்பசி 09, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.19 மணி வரை

கேட்டை முற்பகல் 9.19 மணிவரை
சுப நேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
ஸ்கந்த பஞ்சமி

சந்திராஷ்டமம்
கார்த்திகை,ரோகிணி.

வளவன்

**மேஷம்**
தேவையற்ற குழப்பங்கள் தீரும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும்.

**கடகம்**
பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், இயல்பான வாழ்க்கையில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்**
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**ரிஷபம்**
உறவினர் நண்பர்களிடையே தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களால் தேக நன்மைகள் பாதிக்கப்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்**
தொழில் வளர்ச்சி கூடும், அனைத்திலும் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்**
எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும்.

**கன்னி**
கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு**
சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மீனம்**
புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

அச்சத்தை அடக்கி வையுங்கள் வீரத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இனந்தெரியாத...

குழு வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிவிட்டுப் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## ஐந்து...

விளக்குப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனம் ஏனைய வாகனங்களுடன் மோதியதில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சமிக்ஞை விளக்கின் புறப்படுகை சமிக்ஞைக்காக எதிர்ப் பகுதியில் காத்திருந்த ஐந்து வாகனங்களின் மீது குறித்த ஹயஸ் வாகனம் சமிக்ஞை இலக்கங்கள் முடிவடையும் வேளையில் வேகமாக கடந்து செல்ல முற்பட்டபோது குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பஸ், மோட்டார் சைக்கிள், கப் ரகவாகனம், ஹயஸ் உள்ளிட்ட வாகனங்கள் விபத்துக்குள்ளாகின.

இதனால் குறித்த இடத்தில் சற்று நேரம் பதற்றம் ஏற்பட்டது. இதன்போது அறுவர் காயமடைந்தனர்.

பலத்த காயங்களுக்குள்ளாகிய ஒருவர் உட்பட நால்வர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இருவரும் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## 'யாழ்தேவி'...

நேற்று (25) பிற்பகல் அநுராதபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர் நீதிமன்றில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

யாழ்தேவி ரயிலுக்கு வேறொரு கட்டுப்பாட்டாளர் நியமிக்கப்பட்ட நிலையில் அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கிப் பயணமானது. (ம-7)

## கொலைக்...

தார். தொடர்ந்து பேசிய அவர்,

வெலிகம பிரதேச சபைத் தலைவர் கொல்லப்பட்டார். அவர் தலைவராகத் தெரிவு செய்யப்படுவதைத் தடுக்க பல செயற்பாடுகளை மேற்கொண்டனர். அவை அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவித்து பாதுகாப்புக் கோரினார். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை என்றார்.(ம-7)

## மக்கள்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மக்கள் பிரதிநிதியாகத் தெரிவாகிய தன் பின்னர் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றதா? அல்லது, ஏதேனும் சட்டவிரோத குற்றச்செயல்களால் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றதா? என்பதை ஆராயும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன் வெலிகம பிரதேச சபைத் தவிசாளரைத் தவிர எதிர்க் கட்சிகளின் 38 தவிசாளர்கள் கடமையில் இருக்கின்றபோது, அவர்களுக்கும் அச்சுறுத்தல் இருக்கிறதா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேபோன்று, ஏனைய உள்ளூராட்சித் தலைவர்களுக்கு இவ்வாறான எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## தமிழர்களுக்கு...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நெடும் பயணத்தில் ஈடுபடுவதாகவும் கடந்த அரசாங்கங்களில் இந்த நீண்ட நெடும் பயணத்தில் சில சில பேச்சுவார்த்தைகளுக்கான வழிகள் அல்லது ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இன்னமும் அது குறித்து சிந்திக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தெரிவாகி ஒருவருடம் கடந்துள்ளதாக்வும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ளதாக்வும் குறிப்பிட்ட அவர், தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தர அரசியல் பிரச்சினை உள்ளது என்றும் அந்த நிரந்தரமான அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய அரசாங்கத்துக்கு இருக்கின்றதா? என்று தமக்குத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

காலம் இழுத்தடிக்கப்படுவதே தவிர அரசாங்கம் இன்னமும் ஊக்கமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பது தான் தம்முடைய நிலைப்பாடு என அவர் தெரிவித்தார். (ம-7)

## அர...

துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்நின்று விட்டதாகக் கூறினாலும், சில குழுக்களுக்கு ஏற்றவாறுகொலைகள் தொடர்ந்து மீண்டும் நிகழ்கின்றன என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவங்களை அரசாங்கம் அவசரமாகத் திட்டமிட்ட குற்றக் குழுக்களுடனும், போதைப் பொருள் நடவடிக்கைகளுடனும் தொடர்புபடுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் கூற்றுக்கள் இருந்த போதிலும், இந்தக் கொலைகளுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் மிகக் குறைவு. மக்கள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்வதும், சட்டம் ஒழுங்கு மீது அரசாங்கத்துக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாததும் கவலை அளிக்கிறது என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## சுமத்ரா...

பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கம் மலேசியாவிற்கு சுனாமி அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை என மலேசிய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் மியூலா போவிலிருந்து வடகிழக்கே சுமார் 62 கிலோமீற்றர் தொலைவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கத்தின் மையம் இருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 5993
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 7 8 3 9 4 0

அத சம்பத
J 3 9 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 0568

சுப தவசக்
திகதி 2025.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 109
இடபம் 04 30 57

தன நிதானய
திகதி - 2025.10.25
சீட்டிழுப்பு இலக்கம் - 2023
O 10 18 28 63 O

மெகா பவர்
திகதி 25/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2341
K 09 05 22 24 63

ஜய
திகதி 2025.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 0261
P 7 8 3 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4235
சீட்டிழுப்பு திகதி 25.10.2025
I 02 19 44 57
I

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 1302
விருச்சிகம் 06 31 38 46 விருச்சிகம்

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4678
சீட்டிழுப்பு திகதி 24.10.2025
தினம் வெள்ளிக்கிழமை
கடகம் 09 37 56 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,624,220.00

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.10.2025 வெற்றி வாரம் 0701
W 1 9 3 2 2 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,168,872.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2967
சீட்டிழுப்பு திகதி 2025.10.25
தினம் சனிக்கிழமை
10 29 39 70 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,922,660.00

சனிதா
திகதி 25.10.2025 வெற்றி வாரம் 5128
17 67 68 79 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,696,538.00

சசிரி
வெற்றி வாரம் 0799
சீட்டிழுப்பு திகதி 25.10.2025
சனிக்கிழமை
17 22 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4679
சீட்டிழுப்பு திகதி 25.10.2025
தினம் சனிக்கிழமை
தனுசு 07 11 34 35
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,902,357.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 26 38 42 65 71
சீட்டிழுப்பு வாரம் 2143
திகதி 25.10.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.602,556,481.00

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2793
சீட்டிழுப்பு திகதி: 2025.10.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,648,224.00
04 24 59 68 R


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் போதைப் பொருள் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸாருக்கு சன்மானம் வழங்கும் நிகழ்விலேயே நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், வெளிநாட்டில் இருந்து போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர் தொடர்பில் தகவல் கிடைத் துள்ளது.

கடந்த காலங்களில் தம்புள்ளையில் மட்டும் மேற்கொண்ட சோதனைகளில் பிடிப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைக ளில் இது தெரியவந்துள்ளது.

இவை தம்புள்ளை, சிகிரியா, கலே வெல போன்ற பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதனால் இந்த வலையமைப்பை உடைக்க வேண்டும். கடந்த காலங்களில் எனக்கு நிறைய தொலைபேசி அழைப்புகள் வருகின் றன என்றார். (ம-7)

பில் அவர் மேலும் கூறுகையில், வெலி கம பிரதேச சபைத் தவிசாளர் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை இடம் பெற்று வருகின்றது.

அதன் அடிப்படையில் துப்பாக்கி தாரிகள் மற்றும் அவர்களை இயக்கிய வர்களை விரைவில் கைது செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

மக்கள் பிரதிநிதிகளுக்குரிய பாது காப்பு நடவடிக்கை சம்பந்தமாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெளிவு படுத்துவார்.

அத்துடன் பாதாள உலகக் குழுக் களுடன் தொடர்புடைய அரசியல்வாதி கள் தொடர்பான விவரத்தை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விரை வில் பாராளுமன்றத்தில் வெளிப்படுவார் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## அரசி...

ஊடகங்களு க்கு நேற்றுக் கரு த்து வெளியிடும் போதே மேற்கண் டவாறு தெரிவித் தார்.

இது தொடர்


## 22 உடன் விற்பனைக்கு 22

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 10 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட மாடிக் கடையும் 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்,
- யாழ். K.K.S. வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S. வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 120 அடி அகலமும் 250 அடி நீளமும் கொண்ட பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்,
- யாழ். நல்லூரிற்கு அண்மையில் மாநகர சபைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்,
- யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
- யாழ்.விக்டோரியா வீதியில் 16 பரப்பு, 8பரப்பு காணியும்
- யாழ்.A9 வீதியில் 10 பரப்பு, 8 பரப்பு காணியும்

உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :

077 723 2535

(C-4186)



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது )

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, புதுக்குடியிருப்பு, கோப்பாய், பண்டத்தரிப்பு, மட்டக்களப்பு, கொடிகாமம், சுன்னாகம், மானிப்பாய், திருகோணமலை, புத்தூர், யாழ்ப்பாணம் (Main Branch), நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com

(C-4189)



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சமையல் உதவியாளர்
- ரொட்டி மேக்கர்
- உணவு பரிமாறுபவர் (Supplier)
- Bill போடுபவர் (Bill Counter)

ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 3 வேளை உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்

(C-4190)

தொடர்பு : 077 882 2741



## வேலைவாய்ப்பு

சமையலறை உதவியாளர்

ஆண் : காலை 10 மணி – இரவு 10 மணி

சம்பளம் : 1800/= (நாளொன்றுக்கு)

பெண் : காலை 8 மணி – மாலை 5 மணி

சம்பளம் : 1500/= (நாளொன்றுக்கு)

(1672)

077 991 2628

077 104 1923



## உதவியாளர் தேவை

யாழ் நகரிலுள்ள கிளினிக் ஒன்றிற்குப் பகுதி நேரமாகப் பணிபுரியத்தக்க பெண் உதவியாளர் தேவை.

(C-4187)


தொடர்பு

077 375 4490

077 220 2769


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 - 02 - 1947 | 24 - 10 - 2025 |



## விநாசித்தம்பி சிவகுமாரன்

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்களம் தொழில்நுட்ப உதவியாளர் T.A)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் 94, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சிவகுமாரன் (Ret T.A) அவர்கள் கடந்த (24.10.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை விநாசித்தம்பி (பிரசித்த நொத்தாரிசு) - மங்கையக்கரசி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (RMP) - இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் ரஞ்சனியின் அன்புக் கணவரும் செந்தூரன் (பொறியியலாளர் - கனடா), பிரசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்சொரூபன்(வர்த்தகவங்கி - செங்கலடி), தர்சிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சபிசா, சுருதீஸ், சர்யூன், சாயிஷா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி ஜானகி, காலஞ்சென்ற சிவானந்தன், சிவராசா, சிவபாலன், காலஞ்சென்ற சகுந்தலா, திருமதி அனுசியா, காலஞ்சென்ற திருமகள், திருமதி தேவகி ஆகியோரின் சகோதரரும் ராகினி, சிவபாலன், சிவகுமார், திருமதி நந்தினி, திருமதி ஜெயந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்ல ப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

94, ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தகவல் : தெ.சற்சொரூபன்
(மருமகன்) 077 918 4638

(5727)


## வேலைவாய்ப்பு

Office Assistant - Female / Male

மிகவும் நல்ல பேச்சுத்திறன் கொண்ட சுறுசுறுப்பான 02 வேலை ஆட்கள் தேவை. யாழ்ப்பாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(C-326)

077 473 7737



## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4189)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/- | Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, புதுக்குடியிருப்பு, கோப்பாய், பண்டத்தரிப்பு, மட்டக்களப்பு, கொடிகாமம், சுன்னாகம், மானிப்பாய், திருகோணமலை, புத்தூர், யாழ்ப்பாணம் (Main Branch), நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## மணமக்கள் தேவை

- 36 வயது, கனடா, கத்தோலிக்க மணமகளுக்கும்
- 41 வயது, லண்டன், இந்து, விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கும்
- 35 வயது, கனடா, இந்து மணமகனுக்கும்

இலங்கையில் பொருத்தமான வரன்களைத் தேடுகின்றோம்.

சொர்க்கம் திருமண சேவை

(C-4191)

தொடர்பு: 0014 1666 61855




## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 199/= | Max 2Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 229/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 280/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | Max 1Kg |
| 1Kg வெள்ளைப் பச்சை(உள்நாடு) | - 210/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| 1Kg தீட்டல் பச்சை ஆட்டக்காறி | - 239/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 995/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 999/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= 70 | |

MAX 03 ~~1200~~ 1135




~~320~~ 280




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.

மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(1677)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org